20327

உ
கணபதி துணை.

சங்கமருவிய
பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்றும்
பொய்கையார் இயற்றியதுமாகிய

# களவழி நாற்பது

## மூலம்

பழைய வுரையோடும்
தாம் எழுதிய குறிப்பு, ஒப்புமைப்பகுதி,
பிரயோகவிளக்கங்களோடும்

இடையாற்று மங்கலம்
வைத்தீச்சுவரையரவர்கள் குமாரரும்
சென்னை,
பிரஸிடேன்ஸி காலேஜ் Retired தமிழ்ப்பண்டிதரும்
ஆகிய
**அனந்தராமையரால்**
**நன்கு பரிசோதித்து,**

சென்னை
**நோபில் அச்சுக்கூடத்தில்,**
பதிப்பிக்கப்பெற்றது.

காபி ரைட்] 1931 [விலை அணா 8.

உ

கணபதி துணை.

சங்கமருவிய
பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்றும்
பொய்கையார் இயற்றியதுமாகிய

# களவழி நாற்பது

## மூலம்

பழைய வுரையோடும்
தாம் எழுதிய குறிப்பு, ஒப்புமைப்பகுதி,
பிரயோகவிளக்கங்களோடும்

இடையாற்று மங்கலம்
வைத்தீச்சுவரையரவர்கள் குமாரரும்
சென்னை,
பிரஸிடென்ஸி காலேஜ் Retired தமிழ்ப்பண்டிதரும்
ஆகிய

**அனந்தராமையரால்**

நன்கு பரிசோதித்து,

சென்னை
**நோபில் அச்சுக்கூடத்தில்,**
பதிப்பிக்கப்பெற்றது.

காபி ரைட்] 1931 [விலை அணா 8.

உ

கணபதி துணை.

# களவழி நாற்பதின் முகவுரை.

அன்புறாமுள் ளோகையுற வாய்நெஞ்சே நல்லறிஞர்
இன்புறுமா றுக்கலுநிற் கெய்துமேல் — பின்புறுநன்
றுதலாற் சான்றோ ரகமகிழச் செய்வியென்று
காதலாற் கற்பகத்தாள் கண்.

இந்நூல், சங்கம் மருவிய நூல்களுள் பதினெண் கீழ்க்கணக் கென்னும் தொகுதியில் ஒன்றாக எண்ணப்படுவது; பதினெண் கீழ்க் கணக்கி னிலக்கணம் * பன்னிரு பாட்டியலென்னும் நூலிற்காணப் படுகின்றது. இக்களவழி நாற்பதின் விஷயமாக அறியவேண்டியன சோழன் செங்கணானையும் சேரமான் கணைக்கா லிரும்பொறையை யும் பொய்கையாரையும் பற்றிய சில செய்திகளாகும். அவற்றை அறிதற்கு இந்நூலினிறுதியிலுள்ள வாக்கியமே மிகவும் முக்கியமா னது. அவ்வாக்கியம்; † 'சோழன் செங்கணானும் சேரமான்கணைக் காலிரும்பொறையும் ‡ [திருப்] § போர்ப்புறத்துப்பொருது, உடைந்

---

* இந்நூல் நூற்போலியென்பதே சில அறிஞர் கொள்கை.

† இவ்வாக்கியத்தை எழுதியவர் இன்னவரென்று அறியக் கூடவில்லை.

‡ தமது திருப்பேர் பொறித்து என்று மாற்றினாருமுளர்.

§ புறம் 74-ஆம் செய்யுளின்பின்னுள்ள தொடரில் 'போர்ப் புறத்து' என்று பாடபேதமுமுள்ளது. அந்நகர் இஃதென்பது விளங்கவில்லை. அது தொன்றுதொட்டுத் தெய்வத்தலமாயிருப்பின், "திருப்போர்ப் புறத்து" என்றலுமாம்.

துழிச் சேரமான் கணைக்காலிரும்பொறையைப் பற்றிக்கொண்டு சோழன் செங்கணான் சிறைவைத்துழி, பொய்கையார் களம்பாடி வீடுகொண்ட களவழி நாற்பது முற்றிற்று' என்பது. இவ்வாக்கியத்தின் பொருளை ஆராய்வதிலுள்ள தடை விடைகளினாலேயே நாம் அறியவேண்டியவற்றை நன்கு அறியலாம்.

இவ்வாக்கியத்தின் முக்கியமான பொருள்: சோழன் செங்கணான் சேரமான் கணைக்காலிரும்பொறையோடு போர்ப்புறத்துப் பொருது, அச்சேரமான் உடைந்துழி அவனைப் பற்றிக்கொண்டு சிறைவைத்தானென்பதும் அவனைச் சிறையினின்றும் விடுவித்தற்காகப் பொய்கையார் சோழனதாகிய * போர்க்களத்தைச் சிறப்பித்துப் பாடி அவனை மகிழ்வித்து இரும்பொறையை அருஞ்சிறையின் வீடுகொண்டாரென்பதுமாம். இதனானே சோழன் வென்றானென்பதும் சேரன் தோற்றானென்பதும் விளங்கும்.

இச்செய்தி இந்நூற் செய்யுளுள்ளும் (39) 'புனனாடன் வஞ்சிக்கோ வட்ட களத்து' என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

---

* போர்க்களம் வென்றவர்க்கேயுரித்தென்பது, 'அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர், தாமாய்ந்தனரே .. இடம்கெட வீண்டிய வியன்கட் பாசறை, களங்கொளற் குரியோ ரின்றித் தெறுவர, உடன் வீழ்ந்தன்றா லமரே' என்னும்(62)புறநானூற்றானும 'வென்று களங்கொண்ட வேந்தன்' என்னும் பெரும்பொருள விளக்கத்தானும் 'பொருசமத்து வேந்த, ரிருங்களி யானை யினமிரிந் தோடக், கருங்கழலான் கொண்டான் களம்' (வாகை. 26.) 'வென்று களங்கொண்ட வேல்வேந்தே' (பாடாண் 37) என்னும் புறப்பொருள் வெண்பாமாலையானும், 'வேந்தனை, வென்றுகளங் கொள்ளுமேல் வேந்து' என்பதனானும் 'தேன்மிடைந்த தாரினான் செருகளஞ் சிறந்ததே' என்னும் சிந்தாமணிக்கு (279.) 'இத்துணையும் இவன் வெற்றியாதலின் இவன் களமென்றார்' என்று நச்சினார்க்கினிய ரெழுதியிருக்கும் விசேடவுரையானும் தெளியலாகும்.

'வஞ்சிக்கோ அட்ட' என்பதற்கு 'வஞ்சிக்கோவை வென்ற' அல்லது 'வஞ்சிக்கோவை வருத்திய' என்ற பொருளே சாலும். 'வஞ்சிக்கோவைக் கொன்ற' என்ற பழைய வுரையிற் பொருள் உள்ளது. இந்தக் 'கொன்ற' என்பதனையும் 'அலைகொலை யென்ற' (தொல். மெய்ப். சூ. 10.) என்புழி, 'கொலை' என்பதற்கு 'அறிவும் புகழுமுதலாயினவற்றைக்கொன்றுரைத்தல்' என்று பேராசிரியர் எழுதியிருக்கும் விளக்கத்தாலாவது, 'மின்னலங் காட்டி யெமைக் கொன்றாய்' (சீவக. 642) என்புழி, 'கொன்றாய்' என்பதற்கு, 'வருத்தினாய்' என்று நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் உரையாலாவது முன்கூறிய பொருளொடு மாறுபடாமல் பொருந்த அமைத்துக்கொள்ளலாம்.

(14) 'புனலுடன் கொங்கரை யட்டகளத்து' என்பதும் (6) 'செம்பியன் வேந்தரை யட்ட களத்து' என்பதும் (16) 'புனலுடன் வேந்தரை யட்ட களத்து' என்பதும் இச்செய்தியையே குறிப்பனவாகும். (1, 3, 4, 5, 7, 8, 9, 10, 12, 18. 20, 22, 23, 24, 25, 26, 27, 28, 30, 31, 32, 33, 36, 37, 38, 41) இவற்றில் பகைவரென்னும் பொருட்குரிய சொற்கள் பல வந்துள்ளன. அதிகாரம் நோக்கி அவற்றுக்கும் சேரமானைச்சேர்ந்தவரென்றேபொருள்கொள்ளவேண்டும்.

வென்ற சோழனே பாட்டுடைத் தலைவன். அவன் பெயர் செங்கணானென்பது; அஃது இந்நூற் செய்யுளுள்ளும் (4, 5, 11) 'செங்கண்மால்' என்றும் (15, 21, 29, 30, 40) 'செங்கட் சினமால்' என்றும் கூறப்பட்டிருக்கிறது. இவற்றில் மாலென்பது (13, 18, 34) இல் வந்துள்ள சேயென்பதுபோல உயர்வு குறித்து வந்தசொல்.

தோற்றவன்பெயர் கணைக்காலிரும்பொறையென்பது; அதற்கு இந்நூலின் இறுதி*வாக்கியமும் புறநானூற்று 74-ஆம் செய்யுளின் பின்னுள்ள †வாக்கியமும் தமிழ் நாவலர் சரிதையில் அச்செய்யுளை எடுத்துக்காட்டுமிடத்து அதற்குமுன் குறிக்கப்பெற்றுள்ள ‡ வாக்கியமுமே ஆதாரங்கள். இப்பெயரைக் கணைக்காலிரும்பொறையென்றே கொண்டனர் சிலர். இதனைப்பற்றி ஒருவருக்கும் வேறு ஆட்சேபமிருப்பதாகத் தெரியவில்லை.

இம்முகவுரைப் பக்கம் * 1-2; † 11-12; ‡ 13.

போர்ப்புறத்து என்பது போர்க்களத்து என்னும் பொருளில் சிலவிடங்களில் வந்துள்ளதாயினும் இவ்விரு வேந்தரும் பொருத இடமும் போர்க்களமே யாதலால் அப்பொருள் கூறினும் பொருந்துமாயினும் இங்கு அவ்வாறு பொருள் கொள்ளுதலினும் வேறு பொருள் கொள்ளல் சிறக்குமாதலானும் வேறுபொருள் கோடற்குத் தக்க காரணமிருத்தலானும் வேறு பொருளே கொள்ளல் வேண்டும். அப்பொருள் யாதெனின் '*போர்ப்புறத்து' என்பதற்கு 'போர் என்னும் நகரின் புறத்தில்' என்பதேயாம். போர் என்பது சோழன் மறவனும் வேற்போரில் வல்லவனுமாகிய பழையனதாய்ச் சோணாட்டிலுள்ளதொரு நகர்.

"வெண்கோ
ட்டிழையணி யானைச் சோழன் மறவன்
கழைபளந் தறியாக் காவிரிப் படப்பைப்
புனன்மலி † புதவிற் போஒர் கிழவோன்
பழைய னோக்கிய வேல்போற்
பிழையல "

என்னும் அகப்பாட்டால் (326) இச் செய்தி நன்கு விளங்கும்.

"கொற்றச சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட் டியானைப் ‡பேஎர் கிழவோன்

---

*போர்ப்புறத்தென்பதற்கு இவவாறுபொருள்கொள்ளாது போர்க்களத்தென்றே பொருள்கொள்ளின், சோழன், வஞ்சி, தொண்டி, மரந்தை முதலியவற்றைப் பற்றாது கழுமலத்தைப் பற்றியதற்குச் சிறந்த காரணம் ஏற்படாது.

† புறவிற்போஒர் என்றும்பாடம்.

‡ சோணாட்டுத் திருமாலின் திருப்பதிகளுள் 'திருப்பேர்' என்பது ஒன்று ; அதுவே 'பேஎர்' எனப்பட்டது என்று சிலர் கருதவும் கூடும். ஆனாலும அகப்பாட்டில் மோனையிலும் பலவிடத்துமுள்ள வாக்கியங்களிலும் போரென்றே இருத்தலால் இதிற் பேஎ ரென்

பழையன் வேல்வாய்த்த தன்னநின்
பிழையா நன்மொழி" (10)

என்ற நற்றிணைச் செய்யுட்பகுதியும் இதனை வலியுறுத்தும்.

இதனால் அச்செய்தி வலியுறுத்தப்படுதலோடு சோழர் கொங்கரை வணக்குதற்கு இப் பழையன் வேற்போர் செய்தானென்பதும் அறிவிக்கப்படுகிறது.

'நன்னன் ஏற்றை நறும்பூ ணத்தி
துன்னருங் கடுந்திறற் கங்கன் கட்டி
பொன்னணி வல்விற் புன்றுறை யென்றாங்
கன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனா னாகித் திண்டேர்க்
கணைய னகப்படக் கழுமலந் தந்த
பிணையலங் கண்ணிப் *பெரும்பூட் சென்னி'

என அகநானூற்றில் (44) ஒரு பகுதி உள்ளது.

---

பதைப் போல ஒன்றென்று திருத்திக்கொள்ளவேண்டுமென்றே தோற்றுகிறது.

* பெரும்பூட் சென்னி யென்னும் பெயர், இப் பாட்டினன்றி வேறோரிடத்துங் காணப்படவில்லை. ஆதலால், சென்னியென்பதையே பெயராகக்கொண்டு அவனுக்குக் கண்ணியைப்போலப் பூணையும் அடையாக்குக 'பெரும்பூண் வளவ' (புறம். 227) என்பதையும் அதனுரையையும் நோக்குக. சென்னி யென்றது செங்கணானை. சென்னி யென்றது செங்கணானை யன்றெனின், அச் சென்னிக்குச் செங்கணானை அரசனாக்கி, அவன்றொழிலைச் செங்கணானதாக்குக. 'மந்தரத்தின் றொழிலை இமயத்துக் கேற்றினார்; அது மலையரையனாதலின்' என்று (சீவக. 963) நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலையும் நோக்குக.

*அதனுரையில் 'நன்னன் முதலாயினர், சேரன் படைத்தலைவர். ........... ........பழையன், சோழன் படைத்தலைவன். †கணையன், சேரன் படை முதலி; முன் சொன்னவர்க்குப் பிரதானி. கழுமலம், ஓரூர்.' என்ற விளக்கமான குறிப்புக்கள் உள்ளன.

இவற்றால், நன்னன் முதலிய அறவரும் அளவிடுதற்கரிய தம் படையொடு கூடிப் பொருத பாசறையில் இப் பழையன் பலரை முன்ப அட்டு, தான் பின்பட்டானென்றும், தன் வீரசேனாதிபதி சேர சேனாதிபதிகளாற் கொல்லப்பட்டதனால், சோழன் சினமூண்டு அவர்கள் தலைவனாகிய கணையனையகப்படுத்தி, அதனோடமையாது அவனகராகிய கழுமலத்தையும் கைப்பற்றினானென்றும் தெரிகின்றன.

வேறொரு பழம்பாடலினுள், 'குடையொடு, கழுமலந் தந்த நற் றேர்ச் செம்பியன்' (தொல். பொருளி. சூ. 20. மேற்.) என ஒரு பகுதியுள்ளது. இந் நூல் 36 ஆவது செய்யுளிலும் செங்கணான் கழுமலத்தைக் கைப்பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.

கழுமலம் கணையனதென்றல் யாங்ஙனம் பொருந்தும்? அகப்பாட்டில் (270), "நற்றேர்க் குட்டுவன் கழுமலத் தன்ன அம்மா மேனி" என வருதலால், அது சேரனதென்று விளக்கமாகத் தெரிகின்றதே யெனின், முன்பு சேரனதாயிருந்து பின்பு அவனால் தனக்குப் பலபோரில் வெற்றிதந்த தன் ஏனாதியாகிய கணையனென்

---

* இவ்வுரையைத் தழுவாது, 'நாமைக தேசே நாமக்ரஹணம்' (பெயர்றோர் பகுதியிற் பெயரைக் கோடல்) என்பதனால், கணையனென்றது கணைக்கா லிரும்பொறையை என்று கொண்டு, சென்னியென்றது செங்கணானை என்று கொள்ளின், இவ்வகப்பாட்டும் களவழி நாற்பதின் இறுதிவாக்கியம் குறித்த பொருளையே தரும். ஆயினும் இது சிறந்ததாகத் தோன்றவில்லை.

† இவன், 'நற்போர்க் கணையன்' (அகம் 384.) என்று சிறப்பிக்கப்பெற்றவன்.

னும் வீரசிகாமணிக்கு அளிக்கப்பட்டதாகலிற் பொருந்துமென்க. இது, தம்முயிரையும் பொருட்படுத்தாது செருவிற் சென்று பொருது வென்று அவ்வெற்றியைத் தம்மரசர்க்கு ஆக்கும் வீரசிகாமணிகளுக்கு அவ்வரசர் * தண்ணடை முதலியன அளிக்கும் மரபுபற்றி அக்கணையற்களிக்கப்பட்டதென்க.

சேரர், கொங்கரை வென்று அவர் †நாட்டை அடிப்படுத்தியிருந்த காலத்து அக்கொங்கரைச் சோழன் செங்கணனேவலால் பழையன் போய்ப் பொருதுவென்றான். அப்போது அக்கொங்கர்க்கு அரசனாயிருந்த சேரமான் கணைக்கா லிரும்பொறை ஏவ, அவன் சேனாபதிகளாகிய நன்னன் முதலியோர் வந்து கூடி எதிர்த்துப் பொருது அப் பழையனைக் கொன்றார்கள். அதனாற் சினமிக்க சோழன், தான் படையெடுத்து வந்து பொருது அச்சேனாபதிகளின் தலைவனான கணையனையும் அவனகராகிய கழுமலத்தையும் கைப்பற்றினான்.

தன் ஏனாதியையும் அவனகராகிய கழுமலத்தையும் சோழன் செங்கணான் கைப்பற்றியதனால், அவன் சேனாதிபதி நகராகிய போரைக் கைப்பற்றக் கருதிச சேரன் வெங்கணனாய் அப்போருக்கு வந்து போர்புரிந்தான்.

பொருது உடைந்துழி - (அங்கே) போர்செய்து (சேரமான்) தோற்றபொழுது; தோற்றவிடத்து என்றுமாம்.

---

* புறப்பொருள் வெண்பா மாலை, கரந்தை. 12, வஞ்சி 13 ஆம் வெண்பாவும் கலி. 81. பக்கம் 481. 2 ஆம் குறிப்பும் பார்க்க.

† இந்நாடு முதலில் மூவேந்தராட்சியுள்ளும் அடங்காது தனித்திருந்தது. பிறகு சேரர் ஆட்சிக்கு உட்பட்டது. சேரருள் ஒருவர் "ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த வேல்கெழு தானை வெருவருதோன்றல்" என்று(பதிற். 22.)கூறப்படுவதனால், அவர் அந்நாட்டை வென்று அடிப்படுத்தியவரென்பதும், மற்றொருவர், "நாரரி நறவிற் கொங்கர் கோவே" "கட்டிப புழுக்கிற் கொங்கர் கோவே" என்று (பதிற். 88, 90.) விளிக்கப்படுவதனால், அவர் அரசராய் அங்

இவ் வாக்கியத்தில் 'உடைந்துழிச் சேரமான் கணைக்காலிரும்பொறையைப் பற்றிக்கொண்டு' என்றதனால், போரினின்று தன்னூர்க்கு உடைந்தோடிய சேரனை அங்குச் சென்று பற்றிவந்து என்று கோடலுமாம். அச் சேரனை * அவனெல்லையிலே ஓட்டி அவனைச் சேர்ந்தவர் முன்னிலையிற்பற்றி அவமானப்படுத்த வேண்டுமென்றே சோழன் இவ்வாறு செய்தனன் போலும். அற நூல் வழியே ஒழுகும் வேந்தரும் தம் பகைவர் மாட்டுப் பொருணூல் வழி ஒழுகவேண்டியவ ராவரன்றோ !

சோழன், தான் தன் ஏனாதியை யிழந்து வருந்துதல்போல இச் சேரனும் தான் தன் † மானாதியை இழந்து வருந்துதல் வேண்டுமென்று அவனைச் சிறைப்படுத்தினன். தன் சேனாதிபதியைக் கொன்றவர்க்குத் தலைவராகிய கணையனும் இரும்பொறையும் தன் கையிற் சிக்கியவிடத்தும் அவரைக் கொல்லாமல் ஆருயிரளித்த சீரிய தகைமை இச் சோழன் அருள் நீதி முதலிய பண்புகளை எவ்வளவோ மேம்படுத்துகின்றது.

---

நாட்டை ஆண்டாரென்பதும் விளங்கும். இகனை ஒருமுறை சோழர் வென்றிருக்கிறாரென்பது "கொங்குபுறம் பெற்ற கொற்ற வேந்தே" என்று (புறம். 373.) ஒரு சோழன் விளிக்கப்படுவதனாலும் பாண்டியர் ஒரு முறை வென்றிருக்கிறாரென்பது "வாடாப் பூவிற் கொங்கரோட்டி, நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன்" என்று (அகம். 253.) வருவதனாலும் அறியப்படுகின்றன. இவர்களன்றியும் ஆயென்பவனும் ஒருமுறை வென்றானென்பது (புறம் 130.) ஆவது செய்யுளால் தெரிகிறது.

*புறநானூற்றில் 'எள்ளி வந்த வம்ப மள்ளர், புல்லென் கண்ணர் புறத்திற் பெயர, ஈண்டவ ரடுதலு மொல்லான் ஆண்டவர், மாணிழை மகளிர் நாணினர் கழியத், தந்தை தம்மூ ராங்கண், தெண்கிணை கறங்க கசென் றாண்டட் டனனே' என வருதலையும் நோக்குக.

† மானாதி - மான முதலியவை.

சோழன் செங்கணானென்பவனும் கோச்செங்கட்சோழநாயனாரென்பவரும் ஒருவரே யென்று இதுவரை எழுதியவரெல்லாரும் துணிந்திருக்கிறார்கள். என்றாலும் அதில் எனக்குத் துணிவு பிறக்கவில்லை. அதற்குக்காரணம் நாயனார் இரும்பொறையை வென்று களவழி பாடப்பெற்றிருப்பின் அச்செய்தி ஒரு சங்கப்புலவரால் ஒரு நூல் முற்றப் புகழப்பெற்றாரென்று அந்நாயனாரைச் சிறப்பிப்பதோடு அவர் குடித்தோன்றிய தம்மரசர்க்கும் குடிப்புகழாய் மகிழ்ச்சி விளைவிக்குமாதலால், அதனைச் *சேக்கிழார் தாம்பாடிய பெரியபுராணத்துச் சொல்லாது விடாரென்பதே. அன்றியும் அதில் கோச்செங்கட் சோழ நாயனார் புராணம் 14 ஆம் விருத்தத்தில் "அனபாயன், முந்தைவருங் குலமுதலோ ராயமுதற் செங்கணார்" என்பதனால் அந்நாயனாரை முதற் செங்கணாரென்று கூறியிருத்தலும் ஆராய்தற்பாலது. 'செங்கணான்' என்று · இரண்டரசராவது இருந்தால் தானே முதற் செங்கணார் என்று விதந்து கூறவேண்டியதாகும்.

இவ்விரும்பொறை, மூவனென்னும் வீரனது பல்லைப் பிடுங்கி, தன் தொண்டிநகர்க் கோட்டைவாயிற் கதவில் அழுத்தினனென்பர். நற்றிணை 18-ஆம் செய்யுளால் மூவன் பல்லைப் பிடுங்கி தொண்டிக் கோட்டை வாயிற்கதவில் ஒரு சேரமான் அழுத்தினனென்பது தெரிகின்றது. அத்தொண்டி அப்போது இவ் விரும்பொறையின் ஆட்சியி லிருந்ததென்றாவது இவனே அச்செயலைச் செய்தானென்றாவது துணிந்து கூறுதற்கு ஆதாரம் கிடைக்கவில்லை.

---

* சேக்கிழார் நோக்கம், சிவபத்திச் சிறப்பைக் கூறலேயன்றிப் பிறவரலாறு கூறலன்று என்றும் அதனாற் கூறவில்லையென்றும் சிலர் கருதுவர் இவருடனிருந்தவரென்று கருதப்படும் செயங்கொண்டார் இதனைக் கூறுதலாலும் அரசனைத் தம் வழிப்படுத்தக் கருதிய இவர் அவர் மகிழ்தற்குக் காரணமாகிய இச் செய்தியை விட்டாரென்பதோ அல்லது சோழர் மந்திரியாகிய இவர் அதனை அறியாரென்பதோ பொருந்தாதாதலாலும் இவர் கோச்செங்கட் சோழ நாயனாரை முதற் செங்கணார் என்று கூறுதலாலும் களவழி நாற்பதின் றலைவனான செங்கணானை அவர் வழித்தோன்றியவனென்றே ஊகிக்கலாம்.

சிறை வைத்துழி-(சோழன் இரும்பொறையைச்) சிறை வைத்த பொழுது; சிறைவைத்த இடத்து என்றலுமாம்.

சோழன் இவ்விரும் பொறையைச் சிறைவைத்தவிடம் இன்ன தென்பது இவ்வாக்கியத்தால் தெரியவில்லை. ஏதோ ஓரிடத்தில் சிறைப்படுத்தி யிருக்கவேண்டும். 'அநுக்தம் அந்யதோ க்ராஹ்யம்' (ஒரு பொருள் கூறவேண்டியவிடத்துக் கூறப்படாவிட்டால் வேறி டத்திருந்து கொள்ளத்தக்கது) என்னும் நியாயத்தால் சிறைவைத்த விடம் *குடவாயிற் கோட்டமென்று கொள்ளவேண்டும். இது புறம் 74-ஆம் செய்யுளின் பின்னுள்ள வாக்கியத்தால் அறியப்படுவது.

பொய்கையார் களம்பாடி வீடுகொண்ட - இவர், இவ்வரசர்க ளுக்குக் கொங்குநாடு, கழுமலம், போர் என்னும் பல இடங்களிலும் நிகழ்ந்த போரைப் பொருளாகக்கொண்டு களம்பாடி வீடுகொண்ட.

இது "கொங்கரை யட்டகளத்து" "கழுமலங் கொண்ட நாள்" 'போர்ப்புறத்துப் பொருது' என்பவற்றால் அறியப்படுகின்றது.

பொய்கையார் களவழி நாற்பதைப் பாடிச் சேரனைச் சிறை வீடு செய்தாரென்றே கலிங்கத்துப்பரணித் தாழிசையிலும் † மூவ ருலாக்கண்ணிகளிலும் தமிழ்விடு தூதின் கண்ணிகளிலும் கூறப்பட் டிருக்கிறது. அவை:

"களவழிக்கவிதை பொய்கையுரை செய்ய வுதியன்
கால்வழித்தளையை வெட்டியர சிட்டவனும்" கலிங்கத். 182.
"மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும்" விக்கிரம சோழ. 14.

---

* குடவாயிலென்பது குடந்தையெனத் திரிகப்பெற்றதென்ப. குடந்தையென்பது கும்பகோணத்துக்குப் பெயராய் இருவகைவழக் கிலுமுண்டு. இதற்குத்தென்றிசையில் சமீபித்த இடத்து இப்போது குடவாசலென வழங்கும் ஓரூருமுண்டு. இரண்டும் சோணாட்டில் உள்ளவைகளே.

† மூவருலா - விக்கிரம சோழனுலா, குலோத்துங்க சோழ னுலா, இராசராச சோழனுலா.

"அணங்கு
படுத்துப் பொறையனைப் * பொய்கைக்குப் பண்டு
கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோன்"
குலோத்துங்கசோழ. 19 - 20.

"நல்லவன் பொய்கை களவழி நாற்பதுக்கு
வில்லவன் காற்றளையை விட்டகோன்" இராசராசசோழ. 18.

"சேரமான்
றன்னடிக் கண்டு தளைவிடுத்தா யேழ்தளையுன்
பொன்னடிக் கென்பதென்ன புதுமையோ"
மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடுதூது. 78-79.

என்பவைகளே.

இச்செய்யுள்களுக்கு முற்பட்டதென்று கருதத்தக்க
"செய்கை யரிய களவழிப்பா முன்செய்த
பொய்கை யொருவனாற் போந்தாமோ - சய்ய
மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்திக்
கொலைச்சிறைதீர் வேந்துக் குழாம்."

என்னும் (தொல். புறத். சூ. 36. நச். மேற்) செய்யுளிலும் இச்செய்தி கூறப்பட்டுள்ளது.

வீடுகொண்ட (விடுதல் கொண்ட) என்பது, சேரமானைச்சிறைக் கோட்டத்தினின்றும் விடுவித்த என்னும் பொருளது. இவ்விஷயத்தில் 'சேரமான் கணைக்கா லிரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போர்ப் புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து † தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித்

---

* பொய்கை கவிக்குக் கொடுத்து என்றும் பிரதிபேதம்.

† ஆவிற்கு நீரென்றிரப்பினும் நாவிற்கிளிவென்றிருக்க, இவ் வேந்தன் மானநீக்கித் தனக்குத் தண்ணீரிரந்தானா எனின், மான நீக்கி இரந்தானல்லன். தண்ணீர் பெறாத அருந்துயரத்தால் மனந்தடுமாறி இரந்தான்; பெற்றும் உண்டிலன்.

துஞ்சியபாட்டு' என்னும் புறநானூற்றுவாக்கியம் *முரணுமேதோவெனின், முரணுவாறு பொருள் கொள்ள இடமிருப்பின் கொள்ளலாமன்றோ! அம்முரணுக பொருள் யாதெனின் † துஞ்சிய என்பதற்கு உறங்கிய என்று பொருள் கோடலேயாம். அந்நூலில் இவ்விடத்தேயன்றி (34, 46, 47. 51, 55, 58, 59, 60, 61, 69, 173, 196, 197, 198, 226, 229. 236, (237,) 238, 245, 373, 386, 387, 393, 397) இவ் விருபத்தைந்து செய்யுட்களின் பின்னுமுள்ள வாக்கியங்களில் துஞ்சிய என்பது இறந்த என்னும் பொருளில் வந்துள்ளதேயெனின், அச்சொல்லுக்கு அப்பொருளும் உண்டு. இப்பொருளும் உண்டு. எப்பொருள் எங்கும் முரணுதமையுமோ அப்பொருளைத்தானே கொள்ளவேண்டும். துஞ்சுதலென்பது உறங்குதலென்ற பொருளில் பழைய செய்யுட்களிலும் பயின்றுவருகின்றது இங்கு இப் பொருளைக்கொள்ளாது இறத்தலென்றுபொருள்கொண்டால், அஃது இவ்வாக்கியத்துக்கும் முற்காட்டிய செய்யுட்களிற் குறித்த பொருளுக்கும், தமிழ் நாவலர்சரிதை அறிவிக்கும் செய்திகளுக்கும் மாறு பட்டுப் பொருந்தாதாதலால் எல்லாம் மாறுபடாது பொருந்துவதற்கு இப் பொருளையாவது மடிந்திருத்தலென்னும் பொருளையாவது

---

* முரணுமென்று கருதியவர், சோழனிடத்திருந்து சேரனைச் சிறையினின்றும் விடுவிக்க உத்தரவுபெற்றுப் பொய்கையார் சிறைக் கோட்டம் சென்றும், சேரன் இறந்துகிடந்தானென்றும் கழுமலப் போரிற் சிகளுண்டு சிறையிற கிடந்து அரசளிக்கப்பெற்ற சேரன் செற்றம் நீங்காது மீண்டும் போர் என்னும் நகரில் பொருது தோல்வியுற்றுச் சிறையிற் கிடந்து தண்ணீருண்ணுது இறந்தா னென்றும் இரும்பொறை துஞ்ச, மற்றொரு சேரன் அரசளிக்கப் பட்டானென்றும் பொருத்துவாராயினர்.

† 'துஞ்சிய என்ற சொல், இறந்த என்ற பொருளையே மிகுதி யும் தருவதாயினும் இங்கு மூர்ச்சித்த என்று பொருள் கொள்ள வேண்டும்' என்று, பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி உ. வே. சாமிநாதையரவர்கள் (சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும் பக்கம் 94.) கூறுதலும் இங்கே இறத்தலென்ற பொருள் பொருந்தாதென்பதை வற்புறுத்தும்.

கொள்ளவேண்டுமென்பதே என் கருத்து. மடிந்திருத்தலென்னும் பொருளில இச்சொல் அருகி வழங்குகிறது.

சிறைக்கிடத்தல் என்பது சிறைச்சாலையில் உறைதலென்னும் பொருளில் வழங்கியிருந்தாலும் இங்கே சிறையிற்கிடந்தவென்பதற்கு, சிறைச்சாலையிற் படுத்துக்கொண்டு என்று பொருள் கோடல் உறங்குதற்கு ஏற்ற காரணமாய்ப் பொருள் சிறக்கும்.

துஞ்சிய என்பதற்கு உறங்கிய என்று பொருள்கொண்டு, தண்ணீரை யுண்ணாது பாடலைச்சொல்லி உறங்கிய சேரன் எழுந்தபின்பு அப்பாடலைப் பொய்கையாருக்கு எழுதிவிடுப்ப, அவர் வந்து களவழிபாடிச் சிறைவீடு கொண்டாரெனின் ஒன்றேனும் மாறுபடாது பொருந்தும்.

தமிழ்நாவலர்சரிதையிற் காணப்படுஞ்செய்திகள் என்னெனின், "சேரன் கணைக்காலிரும்பொறை செங்கணானால் *குணவாயிற்கோட்டத்துத் தளைப்பட்டபோது பொய்கையாருக்கு எழுதிவிடுத்த பாட்டு:

'குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே'

இது கேட்டுப் பொய்கையார் களவழிநாற்பது பாடச் செங்கணான் சிறைவிட்டு அரசளித்தான்" என்பன;

களவழி நாற்பது - களவழி யென்னுந் துறையமைந்த நாற்பது வெண்பாக்களாலாகிய நூல்.

---

* 'குணவாயிற் கோட்டம்' என்று அறியப்படும் இடம் சேர நாட்டதாதலாலும் குடவாயிலென்பது சோணாட்டுப் பண்டு மிக்குப் பெருமையுற்று விளங்கியதாகத் தெரிதலாலும் தன் பகைவனைப் பற்றியவன் அவனை அவனாட்டிற் சிறைப்படுத்தினனென்பதினும் தன்னாட்டிற் சிறைப்படுத்தினனென்பதே பொருத்தமாதலாலும் குணவாயிலென்பதனைக் குடவாயிலென்றே திருத்திக் கொள்ள வேண்டுமென்று தோன்றுகிறது.

1 - 14, 16 - 20, 22 - 28, 30 - 34, 36 - 39, 41 இந்த முப்பத்தாறு செய்யுட்களும் 'அட்டகளத்து' என்று இறுவன. 15, 21, 29 இந்த மூன்று செய்யுட்களும் 'பொருத களத்து' என்று இறுவன. 40-வது செய்யுள் 'கணைமாரி பெய்த களத்து' என்று இறுவது. இந்நாற்பது செய்யுளும், சோழன் தொழில் செய்த களத்து இவை நிகழ்ந்தன என்று கூறுவன. 35-ஆவது செய்யுள் 'அரசுவார் வீழ்ந்த களத்து' என்று இறுவது. இவ்வாறு எல்லாச் செய்யுளும் களத்து என்றே இறுவன.

இச் செய்யுட்கள் போர்க்களத்தின் சிறப்பைக் கூறுதலால் களவழியென்னும் மறத்துறையின்பாற் பட்டனவாகும். இந்நூல் அத்துறையில் நாற்பது செய்யுட்களை யுடையதாதலால் 'களவழி நாற்பது' என்று பெயர்பெற்றது. இஃது இடத்தாற் றொகுத்ததற்கும் (தண்டி சூ 5.) சங்கியோத்தரபத வெகுவிரீகி சமாசனுக்கும் (பிரயோக. கலித். 24.) நானூற்பானில் இடம்பற்றி வந்ததற்கும் (இ. வி. சூ. 851) உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

இந்நூலில், தானை யானை குதிரை யென்ற மூவகைப்படையின் போரும் நன்கு கூறப்பெற்றிருக்கின்றன. தேரின் போரும் ஓரோவழிக் கூறப்பெற்றிருக்கிறது. இந்நூலே போர்க்களத்தைப் புனைந்துரைப்பவர்க்கு வழிகாட்டியாயிருந்ததென்பதை ஒவ்வொரு பாடலின் கீழும் குறித்திருக்கும் ஒப்புமைப் பகுதிகளே நன்கு தெரிவிக்கும். இதிற் கூறப்பெற்றுள்ள உவமைகள் இன்புறுத்தற்பாலன. கார்த்திகைத் திருநாளில் தீபம் மிகுதியாக ஏற்றப்படுவது அக்காலத்துமுள்ளதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இனி இந்நூலைப் பாடிய பொய்கையாரைப்பற்றி ஆராய்வோம்.

இப்பொய்கையார் இன்ன குடிப்பிறந்தவரென்றும் இவரை ஈன்றவர் இவரென்றும் இவர் கல்வி பயின்றவண்ணம் இவையென்று மறிய ஓர் ஆதாரமும் கிடைக்கவில்லை. இவர் பாடியனவாகப் புறநானூற்றிற் காணப்படும் பாடல் (48-49) இரண்டு. நற்றிணையிற் காணப்படும் பாடல் (18) ஒன்று.

அவற்றுள் புறப்பாட்டிரண்டும் சேரமான் கோக்கோதை மார்பனைப் பாடியவை. அவ்விரண்டனுள் முதற்பாட்டு:—

கோதை மார்பிற் கோதை யானும்
கோதையைப் புணர்ந்தோர் கோதை யானு
மாக்கழி மலர்ந்த நெய்த லானுங்
கணைறு ரும்மே கானலந் தொண்டி
யஃதெம் மூரே யவனெம் மிறைவ
னன்றோற் படர்தி யாயி னீயு
மெம்மு முள்ளுமோ முதுவா யிரவல
வமர்மேம் படூஉங் காலைநின்
புகழ்மேம் படுநனைக் கண்டனை மெனவே.

என்பது. இதில் 'கானலந் தொண்டி, அஃதெம்மூரே' என வருத லால் இவரது ஊர் மேல்கடற்கரைக்கண்ணதாகிய தொண்டியென்று சொல்லலாம். * தம்மைப் புரப்பவன் நகரந்தல்பற்றிக் ' கூறினு ரென்று கருதுவாருமுளர். 'அவனெம் மிறைவன்' என்றலால் இவர் அவ்வேந்தனுல் ஆதரிக்கப் பெற்றவரென்பது துணிவு.

இப் பொய்கையா ரென்னும் புலவரும் பொய்கையாழ்வாரும் ஒருவரே யென்பது சில அறிஞர் கொள்கை. அக் கொள்கைக்கு உடம்பட்டவர் சிலரும் உடம்படாதவர் சிலருமாயிருக்கிறார்கள். என் மனமும் அக் கொள்கைக்கு உடம்படவில்லை. காரணம் என்னை னின், பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்குக்களுள் வழங்காத வட சொற்கள் பொய்கையாழ்வார் அந்தாதியில் 30.க்குக் குறையாமல் காணப்படுதலும்

அவ்வந்தாதியில்

" வாயவனை யல்லது வாழ்த்தாது " 11.
" நாநாளும், கோணு கணையான் குரைகழலே கூறுவதே " 63.
" வியவேன், திருமாலை யல்லது தெய்வமென் றேத்தேன்" 64.
" பாடிலும் நின்புகழே பாடுவேன் " 88.
" மாயவனை யல்லால், இறையேனு மேத்தாதென் று " 94.

* 'செல்வ சேறுமெந் தொல்பதிப் பெயர்ந்தென ' (பொருந. 121) என் புழி, 'தொல்பதி என்றார், இதுவும் தமக்குப்பதியென்பது தோன்ற' என்று நச்சினார்க்கினியர் எழுதியிருத்தல் நோக்கற்பாலது.

என்பவற்றால் திருமாலையல்லது பிறரைப் புகழேனென்பதை அவர் பலவிடத்தும் தெளிவாகக் கூறியிருத்தலும்

"மாலடியை யல்லால்மற், றெண்ணத்தா னுமோ விமை" 31. என்பதனால், திருமாலடியிணைகளையன்றிப் பிறபொருளை மேலாக நினைக்கவும் கூடாதென்று அவர் கூறியிருத்தலுமாம்.

"திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனேயென்னும்" என்பாராதலிற் புகழலாமேயெனின், திருமாலைப் புகழுமிடத்துச் சார்த்துவகையாற் புகழ்வாரேயன்றித் தனித்துப் புகழாரென்பது எனது உட்கோள். மற்றை ஆழ்வார்களும நாயன்மார்களும் கூறியிருப்பவற்றையும் நோக்குக.

பொய்கையாரென்னும் பெயருடைய பாவலர் பலரென்றும் அவர்களுள் களவழி பாடியவர் கி-பி. 1-ஆம் நூற்றாண்டிலும் இன்னிலை பாடியவர் கி-பி. 2-ஆம் நூற்றாண்டிலும நாலாயிரப் பிரபந்தத்துள்ள முதற்றிருவந்தாதி பாடியவர் கி-பி. 8-ஆம் நூற்றாண்டிலும் இருந்தவரென்றும் யாப்பருங்கல விருத்தியுரையிலும் பன்னிரு பாட்டியலிலும் குறிக்கப்படுபவர் இவர்களின் வேறானவரென்றும் கூறுவாருமுளர்.

பன்னிருபாட்டியலென்னும் நூல் நம்பத்தக்கதன்றென முன்பே குறித்துள்ளேன். இன்னிலையென்பது பண்டைநூலுரைகளில் மேற்கோளாக வந்துள்ள சில செய்யுட்களோடு யாரோ ஒருவர் தாமும் சில செய்யுட்களைப் பாடி இன்னிலையென்று பெயரிட்டுப் படைத்த நூலென்றும் நம்பத்தக்கதன்றென்றும் தோன்றுகிறது. இதனைப் படைத்தவர்பெயர் பொய்கையாரெனின் அவர் வேறொரு பொய்கையாராவர். தமிழேட்டுச் சுவடிகளைத் தேடித் தொகுத்துக் காப்பாற்றுபவர் பலரிடம் விசாரித்தபொழுது இன்னிலை யென்னும் நூல் இல்லா நிலையதாயும் கைந்நிலையென்னும் நூல் அவர்கள் கைந்நிலையதாயும் இருக்கக் கண்டதுண்டு. யாப்பருங்கல விருத்தியில் மேற்கோள் வந்துள்ள பொய்கையார் பாடல்களில், சில களவழி பாடிய பொய்கையாரும் சில பொய்கையாழ்வாரும் இயற்றியவையாயிருக்கலாமென்பதே என் றுணிபு.

இதிற்குறித்த அரசர்களையும் புலவரையும் போர்புரிந்த இடமுத லியவற்றையும் பற்றிய செய்திகளை அறிஞர் பலர் தத்தம் உரைநடை களில் ஆங்காங்குக் குறித்துள்ளார். அவற்றிற் காணப்படாத செய்தி சில இதிலிருப்பினும் ஆராய்ச்சி செய்தலால் நாளடைவில் அரிய உண்மை விளங்குவ தியல்பென்பதும் அது வெளியாவது நன்றென் பதும் அவர்களறியாதனவல்ல.

குழவி கிளியிவற்றின் கூற்றும் பொருந்தின்
இழிவெனு தேலாதோ விப்பார் - முழுதோர்
இமையோர்த மாசான் இயம்பிய் தேனும்
அமையாதேற் கொள்ளுங்கொ லன்பு.

என்பது மூதறிஞர் கருத்தன்றே!

இவ்வரசர்கள் சங்க நூல்களிற் கூறப்படும் பிறரோடு தொடர் புடையரல்லர். இப்புலவரும் இவ்வரசர்களோடும் சேரமான் கோக் கோதை மார்பனோடுமே தொடர்புடையர். ஆதலால், இவர்களு டைய காலத்தை வரையறுத்துச் சொல்லுவது இயலாது. ஆனு லும், அது கி. பி. 2-ஆம் நூற்றுண்டாகுமென்பதே எனது ஊகம்.

என் மனத்துத் தோன்றியதை ஊமையன் கண்ட கனவு போலாக்காது வெளியிடவேண்டுமென்றும் அது பொருந்தினல் உலகங்கொள்ளுமென்றும் கருதி இதனை வெளியிட்டேன்.

'காய்வதன்கண், உற்ற குணந் தோன்ருதாகும் உவப்பதன்கண் குற்றமும் தோன்ரு கெடும்' என்பது அறநெறியோர் அமிழ்தமொழி யாதலின், 'காய்தலுவத்த லகற்றி யொருபொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கண்ணதே'

இந்நூற் பதிப்புக்கள், பல காணப்படுகின்றனவாயினும் அவற்றிற் காணப்படாத திருத்தங்கள் இப்பதிப்பில் மூலம் உரை இரண்டினும் ஆங்காங்குச் சிற்சில காணப்படுமாதலால் இதனையும் அறிஞர்கள் தள்ளுதல் செய்யாது கொள்ளுதல் செய்வாரென நினைக்கிறேன்.

மயிலாப்பூர்
22-11-1930

இங்ஙனம்,
இ. வை. அனந்தராமையன்.

உ

கணபதி துணை.

# களவழி நாற்பது

## மூலமும் உரையும்

௧. நாண்ஞாயி றுற்ற செருவிற்கு வீழ்ந்தவர்
வாண்மாய் குருதி களிறுழக்கத் - தாண்மாய்ந்து
முற்பக லெல்லாங் குழம்பாகிப் - பிற்பகற்
றுப்புத் துகளிற் கெழூஉம் புனனாடன்
றப்பியா ரட்ட களத்து.

---

### பிறராட்சி.

௧. "கால்வல் புரவியுங் கடுங்கண் யானையும், வேல்வ லிளையரும் விழுந்துகுழம் பாகிய, வள்ளற் செஞ்சே றுள்ளோ ருழக்கலிற், றுப்புநிலத் 'தெழுந்த ['துகளென மிக்கெழுந் தந்தர விசும்பி னந்தியிற் பரப்பவும்" பெருங். (௩) ௨௦: ௮௦ - ௮௬. என்பது இச்செய்யுளோடு ஒப்புநோக்கற்பாலது.

"நாண் ஞாயிறு..... ......களத்து" என்பது அளவியல் வெண் பாட்டுக்கு மேற்கோள்; தொல். செய். சூ. ௧௫௮. பே.

"வாண்மாய் குருதி களிறுழக்கத் - தாண்மாய்ந்து" என்பது ஒரூஉவெதுகைக்கு மேற்கோள்; தொல். செய். சூ. ௯௩. நச்.

(பழைய உரை)

எ - து: காலை வந்துற்ற போரின்கண் பட்டவருடைய வாள் அழுந்துங் குருதியைக் களிறுழக்க, அவற்றின் தாளாலே சுருங்கி முற்பகலெல்லாஞ் சேறாய்ப் பிற்பகற்பவளத்துகளாய் விசும்பெங்கும் பரந்து செறியாநிற்கும்; நீர் நாடன் பிழைத்தாரைக் கொன்ற களத்து. எ - று.

பிரதிபேதங்கள் பின்பு தனித்துக் காட்டப்படும்.

(குறிப்பு.) நாள் - உதயகாலம்; ஞாயிற்று நாள் - சூரியோதயகாலம்; இது பின்முன்னாய்மாறிநின்றது. இனி நாளென்பதற்கு, காலையென்று பொருளாக்கி, ஞாயிறுற்ற செருவென்பதற்கு, சூரியனை அடைதற்குக் காரணமாகிய போரென்றலுமாம்; போரில் எதிர்த்திறந்தவர் சூரியமண்டிலத்தைப் பிளந்து வீரச்சுவர்க்கம் புகுவரென்பது நூற்றுணிபு. "கதிருடல் வழிபோய்க் கல்லுழை நின்றோர்" என வருதல்காண்க. செரு-போர்; சண்டை. "யாதனுருபிற் கூறிற் றாயினும், பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்" என்றதனால் நான்காம் வேற்றுமை உருபிற்கு ஏழாம் வேற்றுமைப் பொருள் கூறப்பட்டது. மாய்தல் - மறைதலென்னும் பொருளுடையதாதலால் அழுந்துதலென்று விளக்கமாகக் கூறினர். குருதி-இரத்தம். களிறு-ஆண்யானை; இது யானையின் பொதுப்பெயராயும்வரும்; "களிறு சிந்துரங் கறையடி யெறும்பி", "களிறு பூட்கை கரிமா தங்கம்" "கரி கயங் களிறு கைம்மா" "களிறு, மாதங்க நாகங் கைம்மா" எனப் பலரும் கூறுதல் காண்க. தாள் - கால். மாய்தல் - சுருங்குதல்; இஃது அரும்பதம். முற்பகல் - பகலின் முன் பாகம். பிற்பகல் - பகலின் பின்பாகம் 'முற்பகல் பிற்பகலென்பன, பின்முன்னாகத்தொக்கஆறும்வேற்றுமைத்தொகை' என்று பரிமேலழகர் எழுதியிருக்கிறார். குழம்பு - சேறு; இது வழக்கிலுமுள்ளது. துப்பு - பவளம். துகள், தூளெனமருவி வழங்குகின்றது. கெழுவுதல் - செறிதல்; நெருங்குதல். புனல் - தண்ணீர்; காவேரியாற்றால் நீர்வளமுடையதாதலால்

சோழனுடு புனனுடெனவும் நீர்நாடெனவும் பெயர்பெற்றது. தப்பியார், பிழைத்தா ரென்பவை, தப்புச்செய்தவர் பிழை செய்தவரென்னும் பொருளினவாய்ப் பகைவரை உணர்த்தி நின்றன. அட்ட - கொன்ற. இறந்தகாலப் பெயரெச்சம்; இது ஒற்றிடை யிரட்டுதலாகிய விகாரத்தை அடைந்து இறந்த காலங் காட்டிற்று; அடுதல் - கொல்லுதல். விசும்பு-ஆகாய வெளி. களமென்றது போர்க்களத்தை; களம் - இடம். * (க)

உ. ஞாட்பினு ளெஞ்சிய ஞாலஞ்சேர் யானைக்கீழ்ப்
போர்ப்பி லிடிமுரசி னூடுபோ மொண்குருதி
கார்ப்பெயல் பெய்தபிற் செங்குளக் கோட்டுக்கீழ்
நீர்த்தூம்பு நீருமிழ்வ போன்ற புனனாடன்
ஆர்த்தம ரட்ட களத்து.

எ - து: படையுளொழிந்த நிலஞ்சேர்யானைகளின் கீழ்க்கிடந்த போர்ப்பில்லாதஇடிபோன்றொலிக்குமுரசினூடுபோம்ஒள்ளியகுருதி மழைப்பெயல் பெய்தபின்பு செங்குளக்கரையின்கீழ் நீர்த்தூம்பு நீருமிழ்வபோன்ற; புனனாடன் ஆர்த்து அமரட்டகளத்து.எ - று.

(கு - பு.) ஞாட்பு - படை; இச்சொல், இப்பொருளில் வேறிடத்துக் காணப்படவில்லை; போர்க்கள மென்ற பொருளில் மிகுதி யாக வருகின்றது; இவ்விடத்து அப்பொருளும் பொருந்தும். எஞ்சுதல் - ஒழிதல்; இங்கே இறத்தல். ஞாலம் - பூமி. போர்ப்பு - பக்கத்துப் போர்த்த தோல்; இது கண்ணெனப் படும். இல் - இல்லாத. முரசினேசைக்கு இடியோசையை உவமை கூறும் வழக்கை "உருமிடி முரசமொடு" என்பது முதலியவற்றால் அறிக. ஊடு - உட்புறம்; போம் - ஓடுகின்ற; செய்யுமென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம், ஈற்றிலுள்ள உகரவுயிர் ககரமெய்யொடுங் கெட்டு நிகழ்காலத்து வந்தது இங்கே ஈறு என்பது ஈற்றயலிலுள்ளகுகரத்தை. கார் - மழை.

* எழுதப்படும் குறிப்புக்களில் முன்பு பொருளெழுதப்பெற்ற சொற்கள் பின்பு பெரும்பாலும் பொருளெழுதப்பெறா.

கார்ப்பெயல், கார்காலத்து மழையுமாம். செங்குளம் சிவப்பாகிய நீரையுடைய குளம்; செம்பூத் தாமரை, செந்தாமரை யெனப் படுதல் காண்க; செவ்வற் பூமியிலுள்ள குளமுமாம். கோடு - கரை. நீருமிழ்வ: உமிழ்வநீர் - உமிழ்கின்றனவாகிய நீாகளை; இவ்வாறன்றி, "போமொண் குருதி" என்பதற்கு, 'ஒண்குருதி போதல்' என்பது கருத்தென்று பொருள் கொள்வாருமுளர். போன்ற-ஒத்தன; இது அன்சாரியைபெறு துவந்த அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினைமுற்று. இந்நூலில் வரும்பலவின்பால்வினைமுற்றுக்கள்பெரும்பாலும் அன்சாரியை பெறுமலே வருகின்றன. குருதி, பால்பகா அஃறிணைப்பெயராதலின் இங்கே பன்மையில் வந்தது; இஃது அஃறிணை யியற்பெயரென்றும் கூறப்படும். யானைகட்குக் குளக்கரையும் அவற்றின்கீழ்க் கிடந்த போர்ப்பற்ற முரசுகளுக்கு நீர்த்தாம்புகளும் இரத்தத்துக்குச் செந்நீரும் உவமை. அமர் - சண்டை.

௫. ஒழுக்குங் குருதி யுழக்கித் தளர்வா
ரிழுக்குங் களிற்றுக்கோ டூன்றி யெழூஉ
மழைக்குரன் மாமுரசின் மல்குநீர் நாடன்
பிழைத்தாரை யட்ட களத்து.

எ - து: புக்காரை யொழுக்குங் குருதியை உழக்கி வீழ்வார், இழுக்கப்பட்ட களிற்றுக்கோடுகளே ஊன்றியாக எழும்; மழைக்குரல்போன்ற முரசினையுடைய நிறைந்த நீர்நாடன் பிழைத்தாரைக் கொன்ற களத்து. எ - று.

(கு - பு.) ஒழுக்குதல் - செலுத்துதல்; இங்கேஇழுத்தல்; தளர்வார் - தளர்ந்து விழுபவர்கள். களிறு கோடு - யானைத்தந்தம், 'ஒழுக்குங் குருதி' 'இழுக்குங் களிற்றுக்கோடு என்பவற்றால் இரத்தம் ஆறாக ஓடுதல் பெறவைத்தார்' அச்சுப்பிரதிகள் பலவற்றிலும் மூலம் உரை இரண்டிலும் எழுவரென்று காணப்படினும் கையெழுத்துப்பிரதிகளில் 'எழூஉம்' என்றே மூலபாடமும் 'எழும்' என்றே உரையும் காணப்படுகின்றன. இவ்வினைமுற்று, பரிபாடலில் இறந்தகாலத்தில் வந்திருத்தல்போல இங்கே பலர்பாலில்வந்த வழுவமைதிபோலும். மழை குரல் மா முரசு-மேகத்

தினது முழக்கம்போன்ற முழக்கத்தினை யுடைய பெரிய முரசு; முரசுக்குஇடிமுழக்கன்றியும் மழைமுழக்கும் உவமை கூறப்படும். மல்குதல்-நிறைதல். புக்கார்-வந்தவீரர்கள். [illegible]ன்றி-ஊன்றுகோல். (ரு)

௬. உருவக் கடுந்தேர் முருக்கிமற் றததேர்ப்
பருதி சுமந்தெழுந்த யானை - யிருவிசும்பிற்
செல்சுடர் சேர்ந்த மலைபோன்ற செங்கண்மால்
புல்லாரை யட்ட களத்து.

எ - து: அஞ்சத்தக்ககடியதேரைக்குத்தி அத்தேரினுருளையைச் சுமந்தெழுந்தயானைகள், இருவிசும்பிற்செல்சுடர்ஞாயிறுசேர்ந்தமலை போன்ற; செங்கண்மால் பொருந்தாரைக்கொன்றகளத்து. எ-று.

(கு - பு.) உரு - தன்னைக்கண்டார்க்கு அச்ச முண்டாக்குகை. கடுந்தேர் - கடுமையாகிய நடையையுடையதேர்; முருக்குத லென்பதற்கு, இங்கேகுத்துதலென்று பொருள்கொண்டிருக்கிறார்; முறிதலென்ற பொருள் பெருவழக்கு. பருதி - உருளை. இச்சொல் பரிதியென்றும் வழங்கும். இரு விசும்பு - பெரிய ஆகாசம். இருமை - பெருமை. செங்கண் மால் - செங்கட்சோழன். மாலென்பது சோழனுக்குப் பெயராகப் பிங்கல முதலிய நூல்களிற் கூறப்படுதலும் மூவ நுலாக்களில் திருமாலின்கூறுகிய இராமன் குடியிற் பிறந்தார் சோழரென்று கூறப்படுதலும் கம்ப ராமாயணத்தில் இராமன் பெரும் போர் செய்யத் தொடங்குகையில் ஆத்தியோடு தும்பையை அணிந்தானென்று கூறப்படுதலும் பெரும்பாணாற்றுப்படையில்

---

௬. "உருவத்தே ரிறமுருக்கி யுருணேமி சுமந்தெழுந்து, பருதி சேர் வரைபோலப் பகட்டினம் பரந்தனவே" சீவக. உஉ௩எ.
"அத்தம் மனைய களிறு" சீவக. கஅ.

"அத்தமா மணிவரை யனைய தோன்றல,............ ..பருமயானையே" சீவக. உஉகக.

"உருவக் கடுந்தேர் முருக்கிமற் றத்தேர்". என்பது பொழிப் பெதுகைக்கு மேற்கோள்; தொல். செய். சூ. கரு. நச்.

சோழன் திருமால் குடியிற் பிறந்தவனென்று கூறப்படுதலும் இங்கு அறிதற்பாலன. புல்லார் - பொருந்தார்; என்றது பகைவரை. புல்லுதல் - பொருந்துதல். செல் சுடர் ஞாயிறு - சென்ற கிரணங்களையுடைய சூரியன். யானைக்கு அத்தமயகிரியும், அதுசுமந்த தேருருளைக்கு அம்மலையையடைந்த மாலைக் காலச் சூரியனும் உவமை. (௬)

௭. தெரிகணை யெஃகந் திறந்தவா யெல்லாங்
குருதி படிந்துண்ட காக - முருவிழந்து
குக்கிற் புறத்த சிரல்வாய செங்கண்மா
றப்பியா ரட்ட களத்து.

எ - து: தெரிந்தஅம்புகளானும் வேல்களானுந் திறக்கப்பட்ட எல்லாப் புண்வாய்களினும் படிந்து குருதியை யுண்ட காகங்கள், தம்முடையநிறத்தையிழந்து செம்போத்தின்புறத்தையுடையவாய்ச் சிரல்போன்றவாயையுடையவாயின; செங்கண்மால் பிழைத்தாரைக் கொன்ற களத்து.எ - று.

(கு - பு) கணை - அம்பு. எஃகம் - வேலாயுதம். வாய் - இடம். உரு - நிறம். குக்கில் - செம்போத்து; இஃது ஒரு பறவைச் சாதி; இதன் சிறகு செந்நிற முடையது. தெரிந்த அம்பு ஆராய்ந்தெடுத்த பாணம். சிரல் - மீன்கொத்தி யென்னும் குருவி. சிரல்போன்ற வாய் - சிரலின் வாய்போன்ற வாய்; இதனை, 'துடியிடை' என்பதுபோற் கொள்க. இதன் வாய் பொன்னிறமுடைய தாதல் பற்றி இதற்குப் பொன்வாய்ப்

---

௭. "குருதி படிந்துண்ட காக முருவிழந்து குக்கிற் புறத்த சிரல் வாய" என்பதனை ஆக்கக் கிளவி செய்யுளுட் காரணம்பெற்றே வருமென்பதற்கு மேற்கோள்காட்டி, இதனுள் 'குக்கிற் புறத்த சிரல்வாய' என்பன ஆக்கமின்றி வந்தனவாலெனின் தொகுக்கும்வழித் தொகுத்தலென்பதனால்ஆண்டுஆக்கச்சொல் தொக்கு நின்றதென்பர் சேனாவரையர்; ஆக்கம் விகாரத்தாற் றொக்க தென்பர் நச்சினார்க்கினியர்;தொல். கிளவி. சூ. உ௨.

புள்ளென்றும் பெயருண்டு. 'காகம் குக்கிற்புறதத சிரல்வாய்' என்றது, 'காக்கைகள் மேற்புறமுஞ் சிவந்து வாயும் பொன் வண்ணம் பெற்றன என்றபடி. (௫)

சு. நானாற் றிசையும் பிணம்பிறங்க - யானை
யடுக்குபு பெற்றிக் கிடந்த - விடித்துரறி
யங்கண் விசும்பி னுருமெறிந் - தெங்கும்
பெருமலை தூவெறிந் தற்றே - யருமணிப்பூ
ணேந்தெழின் மார்பி னியறிண்டேர்ச் செம்பியன்
வேந்தரை யட்ட களத்து.

எ - து: நான்குநான்கு திசைதோறும் பிணங்கள்மிக யானைக ளடுக்கியுயர்ந்துகிடந்தன, இடித்துமுழங்கி அங்கண்விசும்பின் உரு மெறிந்து எவ்விடத்தும் பெருமலைகளைத் துடக்கறவெறிந்தாற் போலும்; அருமணிப்பூணேந் தெழின்மார்பி னியறிண்டேர்ச்செம்பி யன் தெவ்வேந்தரை அட்டகளத்து. எ - று.

அல்லதூஉம் நானாற்றிசையுமென்பதனை உம்மைத்தொகையாக நான்கும் நான்குமென உம்மையைவிரித்து எட்டுத்திசையென்று கொள்வாருமுளர். எ-று.

(த - பு.) பிறங்குதல் - மிகுதல். அடுக்குபு - அடுக்கி; இது 'செய்பு' என்னும் வாய்ப்பாட்டு இறந்த காலவினை யெச்சம். பெற்றி - உயர்ந்து; "ஏபெற் றாகும்" என்பது இங்கே கருதத்தக்கது. உரறுதல் - முழங்குதல். 'உருமுரறு கருவிய பெருமலை'' என வருவதுங்காண்க. தூவ - துடக்கற; துடக்கு, தொடர்ச்சிபோலும்; தூவெறிதலென்னு முடிவு புறநடையாற் கொள்கவென்றும்

---

சு. "நானாற்றிசையும்................களத்து" என்பது அளவியல் வெண்பாட்டிற்கு மேற்கோள்; தொல். செய். கடுஅ. பே.

"அஞ்சுவரு மரபின் வெஞ்சினப் புயலேறு..................... குன்றுதூ வெறியு மரவம் போல" புறம். ௬கக: க - ௬.

விகாரமெனினு மமையுமென்றும் கூறுவர். புறநானூற்றுரையாசிரியர். நான்கு நான்குதிசை-பதினாறுதிக்குகள்; இதுபண்புத் தொகை. கோணத்தையுஞ் சேர்த்துப் பதினாறென்று கூறினார். கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கென்ப வற்றைத் திக்கென்றும் இவற்றின் சந்திகளை விதிக்கென்றும் வடமொழி நூலார் கூறுவர்; தமிழ் நூலார் இவற்றை முறையே பெருந்திசை யென்றும் கோணத்திசை யென்றும் கூறுவர். இவ்வழக் கன்றியும் தமிழின்கண் இவற்றைத் திசையாக்கி இவற்றின் சந்திகளைக் கோணமாக்கிக் கூறுவது முண்டு. இதனை "எட்டுத் திசையும் பதினாறு கோணமும்" என வருதலால் அறிக. நான்கு+நான்கு=நானான்கு எனப்புணரும். அம்கண் விசும்பு - அழகிய இடத்தையுடைய ஆகாசம். உரும் - இடியேறு; இடியென்று வழங்கும். மணி பூண் - இரத்தினாபரணம். ஏந்து எழில் மார்பின் இயல் திண் தேர் செம்பியன் - உயர்ந்த அழகினையுடைய மார்பினையும், (விரைவாக) செல்லுகின்ற திண்ணிய தேரினையுமுடைய சோழன். எழில் - அழகு. இயலல் - செல்லுதல். சிபியென்னும் அரசன் மரபிற் பிறந்தவனென்னும் பொருளினதாகிய சைப்பியனென்பது செம்பியனென்று திரிந்ததென்பர். தெவ்வேந்தர் - பகையரசர். 'அட்ட' என்பதனால், 'தெவ்வேந்தரை' என்று பொருள் கூறினார். (௬)

௭. அஞ்சனக் குன்றேய்க்கும் யானை யமருழக்கி
யிங்குலிகக் குன்றேபோற் றோன்றுமே - செங்கண்
வரிவரான் மீன்பிறழுங் காவிரி நாடன்
பொருநரை யட்ட களத்து.

---

௭. "அஞ்சன நிறநீக்கி யரத்தம்போர்த் தமருழக்கி, யிங்குலிக் விறு வரை போன் றினக்களி றிடைமிடைந்த, குஞ்சரங்கள் பாய்ந் திடலிற் குமிழ்விட் டுமிழ்குருதி, யிங்குலிக வருவிபோன் றெவ் வாயுந் தோன்றினவே" சீவக. ௨௨௩௧.

"அடக்கவு மடங்காப் புதுக்கோள் யானை, வால்வளை மகளிரொடு மைந்தரை யுழக்கி, யேரிருங் குலிகப் புனல்பரந் திழி

எ-து: அஞ்சன மலையொக்கும் யானைகள், அமரின்கணுழக்கிச் சாதிலிங்கமலைபோலச்சிவந்துதோன்றும்; செங்கண்வரிவரால் மீன் பிறழும் காவிரிநாடன் தன்னோடுபொருவாரைக்கொன்ற களத்து. எ - று.

(சு - பு.) அஞ்சனக்குன்று -அஞ்சனமலை;அஞ்சனமென்றது இங்கே மலையிலுண்டாகும் பொருள்களுள் கருநிறமுடைய தொரு பொருளை. கருநிறத்தையுடைய மலை என்பாருமுளர். எய்க்கும்-ஒக்கும்; போல இருக்கின்ற. இங்குலிகம் - சாதிலிங்கம்; இது செந்நிறமுடையதொருதாதுப்பொருள்; மலையிலுள்ளது; வரி - கோடு. மீன் பிறழும் காவிரி - மீன் புரளுதற்கிடமான காவேரியாறு பொருநர்-பொருவார்; போர்செய்யும் பகைவர். "அஞ்சனக்...........தோன்றும்" என்றது, 'கரிய நிறத்தை யுடைய மலைபோன்ற யானைகள் ஆயுதங்களால் வெட்டுண்டு இரத்தஞ் சோருதலால் செந்நிறமுடைய மலை போன்றன என்றபடி. (எ)

அ. யானைமேல் யானை நெரிதர - வானாது
கண்ணோர் கடுங்கணை மெய்ம்மாய்ப்ப வெவ்வாயு
மெண்ணருங் குன்றிற் குரீஇயினம் போன்றவே

---

எ. தருங், காரிருங் குன்றிற் கவின்பெறத் தோன்ற" பெருங். (க) சச: அக - அச.

"புகழ்வரைச் சென்னிமேற் பூசையிற் பெரியன, பவழமே யனையன பன்மயிர்ப் பேரெலி, யகழுமிங்குலிகமஞ் சனவரைச் சொரிவன, கவழயானையினுதற் றவழுங்கச் சொத்தவே" சீவக. கஅகூஅ.

"வெங்குருதி மல்க விழுப்புண் ணுகுதொறூஉ, மிங்குலிகஞ் சோரும் வரையேய்க்கும்" பு - வெ. கரந்தை. ௫.

அ. "குன்றத் திறுத்த குரீஇயினம் போல, வம்புசென் றிறுத்த வரும்புண் யானை" புறம். கக: அ - கூ.

பண்ணா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாட
னண்ணாரை யட்ட களத்து.

எ - து: யானைகள் ஒன்றோடொன்று நெரிதர நீங்காது கண்ணோர்கடுங்கணை மெய்ம்மறைப்ப, எவ்வாயும் எண்ணருங்குன்றிற் குரீஇயினம்போன்றன ; பண்ணாரிடிமுரசிற் பாய்புனனீர் நாடன் நேரோரை அட்டகளத்து. எ - று.

(கு - பு.) நெறிதர - நெருங்க. ஆறாது - நீங்காமல். கண் நேர் கடுங்கணை - கண்ணையொக்கின்ற விரைந்து செல்கின்ற அம்பு. மெய் - உடம்பு. மாய்த்தல் - மறைத்தல். "களிறுமாய்க்குங் கதிர்க் கழனி" என வருதல் காண்க. எவ்வாயும் - எல்லாவிடத்தும். எண் அரு குன்று - கணக்கிட முடியாத மலை. குரீஇ இனம் - குருவிக் கூட்டம். குரீஇயென்பதும் குருவிக்கு ஒரு பெயராய்வருதலை, "குரீஇ,யோப்புவாள்" என வருதலாலும் அறிக. பண் ஆர் இடி முரசு - பண் பொருந்திய இடிபோன்று ஒலிக்கும் வீரமுரசு; பண் இன்னதென்பதை ௨0-ஆம் செய்யுளின் குறிப்பிற் காண்க. புனல்-நீர். நீர்நாடென்பது நாடென்னும் பொருளினதாய்நின்றது. நீர்நாடு, காவிரி நாடெனினுமாம். நண்ணார் - நேரார்; பகைவர். (அ)

௯ மேலோரைக் கீழோர் குறுகிக் குறைத்திட்ட
காலாசோ டற்ற கழற்கா லிருங்கடலு

அ. "கருவியூ ளொடு கழிந்து கணை மொய்ப்பக் கதஞ்சிறந்து, குருவிசேர் வரைபோன்ற குஞ்சரம்" சீவக. ௨௨௩௭.

"கோல்பொரக் குளித்த யானை குருவிசேர் குன்றமொத்த" மேருமந்தா. பலதேவர். ௧௫.

௯. "தோலாப்போர் மறமன்னர் தொடித்தோள்களொடுத்தோச்சி, மேலாண்மை னெருப்புமிழ்ந்து மின்னிலங்கு மயில் வாளாற், சாலாசோ டறவெறிந்த கனைகழற்கா லலைகடலு, ணீலநீர்ச் சுறவினம்போ னெய்த்தோருட்பிறழ்த்தனவே" சீவக. ௨௨௬௯.

ணீலச் சுறுப்பிறழ்வ போன்ற புனனாட
னோராரை யட்ட களத்து.

எ - து: குதிரைமுதலாயினவற்றின் மிசையிருந்தோரைக் கீழ் நின்ற காலாட்கள் சென்றுசார்ந்துதுணிக்கக் காற்கிட்ட அரணத் தோடற்ற கழற்கால்கள், பெருங்கடலுள் கருஞ்சுறுப்பிறழ்வன போன்ற; நீர்நாடன் பகைவரை அட்ட களத்து. எ - று.

(கு - பு.) குறுகுதல் - போய் நெருங்குதல். குறைத்தல் - குறைந்த தாகச் செய்தல்; துண்டமாக்குதல்; குறைத்து, 'செயவெனெச் சம்செய்தெனெச்சமாகத்திரிந்துநின்றது. ஆசு-கவசம். இருமை- பெருமை; கருமையுமாம். மிசை - மேலிடம். காற்கு இட்ட அரணம் - காலுக்கு அணிந்த கவசம். அரணமென்பது கவசத்தின் பெயராதலை. அரணம் வீசினரென்பதற்கு,கவசத்தை அணிந்தா ரென்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுதலாலும் அறிக. இஃது ஈறு குறைந்து அரணென்றும் வழங்கும். கழல் கருநிற முடையது; அது "கருங்கழல்" என்னுஞ் செய்யுள் வழக்கால் அறியலாகும். கருஞ்சுறு - கரிய நிறத்தையுடைய சுறுமீன்; சுறுமீனில் வேறுபல நிறங்களுள்ளனவற்றை நீக்குதற்கு, கருஞ் சுறுவென்றார்.கருங்கழலணிந்தகாலாதலின், கருஞ்சுறுஉவமை கூறப்பட்டது. கால்களென்பதற்கு உவமை கருதிக் கால்களின் புரளுதலென்று பொருள்கொள்க. காலாட்களும் தம்வீர மிகுதி யான் ,ஊர்தியாளரை எதிர்த்துச்சென்று அவர்தலை வெட்ட எட்டாமையாற் கால்களை வெட்டினரென்றார். (க)

௧௦ பல்கணை யெவ்வாயும் பாய்தலிற் செல்கலா
தொல்கி யுயங்குங் களிறெல்லாந் - தொல்சிறப்பிற்
செவ்வலங் குன்றம்போற் றோன்றும் புனனாடன்
றெவ்வரை யட்ட களத்து.

எ - து: பல அம்புகளும் எவ்வுறுப்பின்கண்ணும் தைத்தலால் இயங்கமாட்டாதுதளர்ந்துவருந்துங்களிறெல்லாம், முதியசிறப்பினை யுடைய தாதுகிரிபோலத் தோன்றாநின்ற; நீர்நாடன் தெவ்வரை அட்டகளத்து. எ - று.

(கு-பு.) பாய்தல்-தைத்தல். ஒல்குதல்-தளர்தல். உயங்குதல்-வருந்துதல். தொன்மை - முதுமை; பழமை. செவ்வலங் குன்றம்-தாதுகிரி; காவிக்கல்மலை; செம்மண் மலையென்பாருமுளர். செவ்வல் - செந்நிறம். உறுப்பு- அவயவம். இயங்கமாட்டாது - நடக்கமாட்டாமல். தெவ்வர்-பகைவர். இந்நூல் எ-ஆம் செய்யுளும் உக-ஆம் செய்யுளும் ஒப்பு நோக்கற்பாலன. (க0)

கக. கழுமிய ஞாட்பினுண் மைந்திழந்தா ரிட்ட
வொழிமுரச மொண்குருதி யாடித் - தொழின் மடிந்து
கண்காணு யானை யுதைப்ப விழுமெனா
மங்குன் மழையி னதிரு மதிராப்போர்ச்
செங்கண்மா லட்ட களத்து.

எ - து: மிடைந்தபோரின்கண் வலியிழந்தார்போகவிட்ட ஒழிந்தமுரசம், ஒள்ளியகுருதியையாடித் தன்றொழிலைத்தவிர்ந்து, படைகளானூறுபட்டுக் கண்காணுயானைகள் உதைத்தலால் இழுமென மங்குன் மழைபோல முழங்காநிற்கும்; கலங்காப்போரையுடைய செங்கண்மால் கொன்ற களத்து. எ - று.

(கு - பு.) கழுமுதல் - மிடைதல்; நெருங்குதல். மைந்து - வலி. முரசைக் களத்திட்டுப்போதல் வீரமுடையார்க்கு உரித்தன்றாதலால், 'மைந்திழந்தாரிட்ட ஒழி முரசம்' என்றார். இது "அரசுபட வமருழக்கி, முரசுகொண்டு களம்வேட்ட, வடுதிறலுயர் புகழ்வேந்தே" "அண்ணல் யானை யடுபோர் வேந்த, ரின்னிசை முரச மிடைப்புலத் தொழியப், பன்மா றோட்டிப் பெயர்புறம் பெற்று" "இருபெரு வேந்தரையு முடனிலை வென்று, முரசுங் குடையுங் கலனுங் கொண்டு" "எழுவர்

---

கக. "கழுமிய ஞாட்பினுண் மைந்திழந்தா ரிட்ட" என்பது நச்சினார்க்கினியத்திலும் "கழுமிய ஞாட்பு" என்பது சேனாவரையத்திலும் கழுமென்பது மயக்கமாகிய குறிப்புணர்த்திவருமென்பதற்கு மேற்கோள்; தொல். உரி. சூ. ருஉ. நச். சூ. ருரு. சே.

நல்வல மடங்க வொருபகன், முரசோடு வெண்குடை யகப் படுத்து" "உடலருந் துப்பி னொன்றுமொழி வேந்தரை, யணங் கரும் பறந்தலை யுணங்கப் பண்ணிப், பிணியுறு முரசங் கொண்ட காலை" "அரசுபட வமருழக்கி, யுரைசெல முரச வெளவி,...........அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய" "சிறு சொற் சொல்லிய சினங்கெழுவேந்தரை, யருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமோ, டொருங்ககப் படேஎ னாயிற்...........குடி பழி தூற்றுங் கோலே னாகுக" "மலைந்தோர், விசிபிணி முரச மோடு மண்பல தந்த, திருவீழ் நுண்பூட் பாண்டியன்" என, சங்கப்புலவர் பலரும் வெற்றிக்குறிக்கு முரசுகோடலைக் கூறுத லாலும் வலியுறும். ஆடுதல் - முழுகுதல். மடிதல் - தவிர்தல், ஈங்கு முரசுக்குத்தன்தொழில்தவிர்தலாவது: ஒலியாதிருத்தல். படைகளான் ஊறுபடுதல் - ஆயுதங்களாற் காயம்படுதல். இழு மெனா - இழுமென்னுமோசையுண்டாக. இழுமெனல், ஓர் ஒலிக்குறிப்பு. மங்குல்-ஆகாயம். அதிராமை, கலங்காமையென் னும் பொருளதாதல், "பெற்றா னதிர்ப்பிற் பிணையன்னா டா னதிர்க்கும்" என்னுமிடத்து, அதிர்ப்பு, கலங்குதலென்னும் பொருளில் வருதலாலும் துணியப்படும். (கக)

கஉ. ஓவாக் கணைபாய வொல்கி யெழில்வேழந்
தீவாய்க் குருதி யிழிதலாற் செந்தலைப்
பூவலங் குன்றம் புயற்கேற்ற போன்றனவே
காவிரி நாடன் கடாஅய்க் கடிதாகக்
கூடாரை யட்ட களத்து.

எ-து: ஓவாது அம்புகள் தைப்ப எழில்வேழம் தளர்ந்து தீநிறம் போல வாய்த்த குருதி யிழிதலாற் சிவந்தநிறத்தையுடைய செம்மண் மலைகள் புயற்கெதிர்ந்தனபோன்ற; காவிரிநாடன் முயன்று விரைந்து கூடாரையட்ட களத்து. எ - று.

(கு-பு.) ஓவா - ஓவாது; ஓயாமல்; ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். எழில் வேழம் - அழகையுடைய யானைகள்; எழில்-எழுச்சி

யுமாம். இழிதல் -மேலிருந்து கீழிறங்குதல். தலே - இடம். நிற மென்று தாற்பரியமாகக்கூறினர். பூவல் - செம்மண்; "இல்பூவ லூட்டி" என வருதலாலும் அறிக. கடாஅய் - முயன்று; இச் சொற்கு இப்பொருள் வேறெங்கும் காணப்படவில்லை. கடிது - விரைவு. கூடார் - தன்னெடு சேராதவர்; பகைவர். வாய்த்த- பொருந்திய. புயல் - மழை. எதிர்தல் - நேராதல். (கஉ)

கங. நிரைகதிர் நீளெஃக நீட்டி வயவர்
வரைபுரை யானைக்கை நூற - வரைமேல்
உருமெறி பாம்பிற் புரளுஞ் - செருமொய்ம்பிற்
சேய்பொரு தட்ட களத்து.

எ - து: நிரைத்த கதிர்வாள்களைப் பின்பேவாங்கி வீரர் வரை யையொத்த யானைகளின் கைகளைத் துணிக்க வரைமேனின்று உருமெறிந்துவிழும் பாம்புபோல விழுந்து புரளாநிற்கும், போர் வலியையுடைய சேய் பொருதுகொன்ற களத்து. எ - று.

(கு - பு.) கதிர் - கிரணம். எஃகம் - வாளாயுதம். வயவர் - வீரர்; வயம்-வலிமை, வெற்றி. வரை - மலே; வரையென்பது எல்லே; அது கணுக்களாகியஎல்லேயையுடைய மூங்கிற்குஆகுபெயராய் வந்து பின்பு அதன் பிறப்பிடமாகிய மலேக்கு வருதலால் இரு மடியாகுபெயரெனப்படும். புரை-ஒப்பு. நூறுதல் - துணித்தல்; துண்டமாக்குதல். யானேகளுக்கு மலேகளும் அவற்றின் கைகளுக்குப் பாம்புகளும் உவமை. யானேக்கு மலே உவமையாக எ - ஆம் பாட்டிலே வந்துள்ளது. அதன் கைக்குப் பாம்பு உவ மையாதலே, "நாகத் தன்ன நன்னெடுந் தடக்கைக், காய்சின யானே" என்பதனுல் அறிக. மொய்ம்பு - வலி; வலிமை. எறிதல் - தாக்குதல். உருமேறு பாம்பை எறிவதாகக் கூறுவது மரபு; இதனேக் கலித்தொகை உஎச - ஆம் பக்கம் ரு - ஆம்

கங. "எடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து, பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப், பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமிய" புலலே. கூஅ - எ௦.

குறிப்பால் அறிக. சேய் - முருகக்கடவுள்; ஒருவரை வேறொரு தேவராகக்கூறும் பூவைநிலையென்பர், பண்டையோர்; உவமையாகுபெயராய்ச் சோழனைக்குறித்து நின்றதென்பர் பிற்காலத்தவர். (கங)

கச. கவளங்கொள் யானையின் கைகதுணிக்கப்
பவளஞ் சொரிதரு பைபோற் - றிவளொளிய
வொண்செங் குருதி யுமிழும் புனனாடன்
கொங்கரை யட்ட களத்து.

எ - து: கவளத்தைக்கொள்ளும்யானைசடங்கைகள். துணிக்கப்பட்டுப் பவளத்தைச்சொரிகின்றபைபோல் விளங்காநின்ற ஒளியையுடைய ஒள்ளிய செவ்குருதியைச்சொரியாநிற்கும்; புனனாடன் கொங்கரைக்கொன்ற களத்து, எ - று.

(கு - பு.) கவளம் - (இங்கே) அரிசி கருப்புக்கட்டி நெய் முதலியவற்றைக்கவர்துருட்டும் உருண்டையாகியயானைக்கு இனியஉணவு. "தெறும்புற்கொள்யானை கவளங்கொள்ளாமற் றெவிட்டியதே" என்பதனாலும்இஃது அறியலாகும்; "நெய்மிதி கவளம்" எனப் பண்டை நூல்களில் வருதலும் நோக்குக. கவளம் உண்டையென்றும்வழங்கும். "உண்டைகொண்மதவேழம்" எனவருதல் காண்க. திவளுதல் - விளங்குதல். யானைக் கைக்குப் பவளம் வைத்திருந்த பையும் அது வெட்டுப்பட்டுச் சொரியும் இரத்தத்திற்குப் பவளமும் உவமை. இவ் வுவமை கொங்குவேளிராற் பின்பற்றப் பட்டது; கொங்கர் - கொங்குநாட்டினர். (கச)

கரு. கொல்யானை பாயக் குடைமுருக்கி - யெவ்வாயும்
புக்கவா யெல்லாம் பிணம்பிறங்கத் - தச்சன்

---

கச. "பைசொரி பவழம் போலப் படிதாழ், கைசொரி யுதிரங் கான்றவர் திழிதர" பெருங். (க) ருங: உஎ - உஅ.

கரு. வீறுசான் மன்னர் விரிதாம வெண்குடையைப், பாற வெறிந்த பரிசயத்தாற் - றேறுது, செங்கண்மாக் கோதை சினவெங் களியானை, திங்கண்மே னீட்டுந்தன் கை. முத்தொள்.

வினைபடு பள்ளியிற் றோன்றுமே செங்கட்
சினமால் பொருத களத்து

எ - து: எவ்விடத்தும் குடையைமுருக்கிக் கொல்யானைபாய்தலான் அவ்வியானைபுக்கவிடமெல்லாம், பிணம்பிறங்கத் தச்சனால் வினைசெய்யப்படுமிடங்கள்போலத் தோன்றாநிற்கும்; செங்கட்சின மால் பொருதகளத்து. எ - று.

(கு - பு.) கொல் யானை - கொல்லுகின்ற யானை; வினைத்தொகை. முருக்கி - முறித்து. புக்க - புகுந்த'; பெயரெச்சம் ; ஒற்றிரட்டி இறந்தகாலங் காட்டிற்று. வினை - தொழில். பள்ளி - இடம். பொருத - போர்செய்த. தச்சனால் தொழில் செய்யப் படும் இடம் பலவகை மரங்கள் எறியவும் துண்டிக்கவும் செதுக்கவும் ஈரவும் பட்டுக் குவிந்துகிடப்பதுபோல, சோழனால் போர்செய்யப்படும் இடம் பலவகைச் சேனைகள் எய்ய வும் வெட்டவும் குத்தவும் அடிக்கவும் பட்டுக் குவிந்து கிடக் கின்றதென்றபடி. (கஙு)

கசு, பருமம் வினமாக் கடவித் - தெரிமறவ
ருக்கி யெடுத்த வரவத்தி - னார்ப்பஞ்சாக்
குஞ்சரக் கும்பத்துப் பாய்வன - குன்றிவரும்
வேங்கை யிரும்புலி போன்ற புனனாடன்
வேந்தரை யட்ட களத்து.

---

கசு. "தேவதத்தன் கலினமா மாலை வெள்வே, லீட்டம்போழ்ந் தியானை நெற்றி யிருங்குளம் பழுத்தி" சீவக. எஅசு.

"நபுலமா விபுல ரென்பார், காய்ந்துதம் புரவிக் காமர் குளம்பி னாற் களிற்றி னோடை, தேய்ந்துகச் சேர்த்தி" சீவக. எஅஎ.

"கலினமாக் குன்றிற்பொங்கிப், பாய்ந்ததோர் புலியின் மற் றோர் பகட்டின்மேற் பாய்வித்தானே" சீவக. உஉ௫அ.

எ - து: பண்ணினையுடைய மிக்ககுதிரைகள் வீரரானடத்தப் பட்டு உள்ளமிக்கெடுத்தபோரின்கண் ஆர்ப்பையஞ்சாதயானைகளின் மத்தகத்திற்பாய்வன, மலையின்கட் பாய்கின்ற வேங்கைப்பெரும்புலி போன்ற; புனனுடன் வேர்தரையட்ட களத்து. எ - று.

பண் - குதிரைக்கலணை.

(கு-பு.)பருமம் - பண்; குதிரைச் சேணம். இனம் - கூட்டம். மா - குதிரை. கடவுதல் - நடத்துதல்; செய்வினை, செயப்பாட்டு வினைப்பொருளில் வந்தது. தெரி மறவர் - அறியப்பட்ட வீரர்; பலராலும் வீரரென்று அறியப்பட்டவ ரென்றபடி. ஊக்கி - உள்ளமிக்கு; உற்சாகமுற்று. அரவம் - ஓசை; அஃது ஆகுபெய ராய் ஓசையையுடைய போரையுணர்த்தி நின்றது. குஞ்சரம்- யானை. கும்பம் - மத்தகம்; இது யானையின் மத்தகத்துக்குப் பெயராதலால் யானைக்குக் கும்பி யென்றும் ஒருபெயர் வழங் கும். பாய்வன-பாய்கின்றவைகள். இவர்தல்-பரத்தல்; பாய்தல். வேங்கை - ஒருவகைப்புலி. புலிவகையுள் இது பெரிதாத லால் இரும்புலி யென்றார். யானைக்கு மலையும் யானைமேற் பாயும் குதிரைக்கு மலைமேற்பாயும் வேங்கைப்புலியும் உவமை.

கஎ. ஆர்ப்பெழுந்த ஞாட்பினு ளாளா ளெதிர்த்தோடித்
தாக்கி யெறிதர வீழ்தரு மொண்குருதி
கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்குப் போன்றனவே

---

கசு. "கொடிமேலுடை யானைகள் கும்பமுதைத், தடிமேலன வாக வெழுந்து........வாயின பாய்பரியே" சூளா. அரசியற். கoகு. "உறங்கலில் கடாக்களிற் றுச்சி மேலுமாய்த், திறங்கிளர் புரவிக டிரிதர் கின்றவே" சூளா. அரசியற். கசசு.

"நபுலனென்பான், மின்னிற வெஃக மேந்தி வீங்குநீர் மகதை யார்கோன், கொன்னிறக் களிற்றி னெற்றிக் கூந்தன்மாப் பாய்வித் தானே" சீவக. உஉகுஎ.

"மாவே...........புலிபோன்றன" புறம். ௪: எ - கூ.

போர்க்கொடித் தானைப் பொருபுன னீர்நாட
ஞர்த்தம ரட்ட களத்து.

எ – து: ஆர்ப்பெழுந்த போரின்கண் ஆளுமாளும் எதிர்சென்று பொருது படைகளையெறிதலாற் சொரியாநின்ற ஒண்குருதிகள் கார்த்திகை விழாவின்கண் மிக்க விளக்குப் போன்றன; போர்க் கொடியையும் தானையையுமுடைய பொருபுனனீர்நாடன் ஆர்த்து அமர்கொன்ற களத்து. எ - று.

(கு-பு.)ஆர்ப்பு - பேரோசை. தாக்குதல் - போர்செய்தல். வீழ்தரும்-விழுகின்ற. விழு, வீழெனத் திரிந்து நின்றது. சாறு - திருவிழா. கழி - மிகுதி; உரிச்சொல். ஆர்த்து - சிங்கநாதஞ் செய்து. மிக்க இரத்தத்துளிகளுக்குக் கார்த்திகைத்திருநாளின் மிக்க விளக்குகள் உவமை. இவ்வுவமையினால், பண்டைக் காலத்தே கார்த்திகைத் திருநாட் கொண்டாட்ட மிருந்தமை அறியலாகும். "அறுமீன் பயந்த வறஞ்செய் திங்கட், செல்சுடர் நெடுங்கொடிபோலப், பல்பூங் கோங்க மணிந்த காடே", "நல மிகு கார்த்திகை நாட்டவ ரிட்ட, தலைநாள் விளக்கிற் றகை யுடைய வாகி" என்னும் சங்கச்செய்யுட்களும் இதனை வலி யுறுத்தும். (கள)

கஅ. நளிந்த கடலுட் டிமிறிரைபோ லெங்கும்
விளிந்தார் பிணங்குருதி யீர்க்குந் - தெளிந்து
தடற் றிலங் கொள்வாட் டளையவிழ்தார்ச் சேர
யுடற்றியா ரட்ட களத்து.

எ - து: மிக்ககடலுள் திமிலுந்திரையும்போலப் பட்டாருடைய பிணக்குப்பை உதிரம் இழுக்கிற்கும்; உறையினையுடைய, தெளிந் திலங்கிய ஒள்வாளினையும் கட்டவிழ்ந்ததாரினையுமுடைய சேய், தன்னை வெகுள்வித்தாரைக் கொன்றகளத்து. எ.- று.

(கு - பு.) நளிந்தஎன்பது பெருமையென்னும்பொருளையுடைய நளி யென்னும் உரிச்சொ லடியாகப்பிறந்த பெயரெச்சமாதலால்,

மிக்க என்று பொருள் கூறினர். திமில் - மரக்கல வகையு ளொன்று. திரை - அலே. விளிந்தார் - பட்டார்; இறந்த வீரர்கள். ஈர்த்தல் - இழுத்தல். தடறு - உறை. தெளிந்து இலங்குதல் - மிக்குவிளங்குதல். தளை - கட்டு; அஃதாவது அரும்பாயிருக்கையில் இதழ்கள் விரியாது ஒன்ளூடொன்று பின்னிக்கொண்டிருக்கும் நிலைமை. தார் - அடையாளமாலை. சோழற்கு ஆத்திமாலை அடையாளமாலையெனப்படும். உடற்றி யார் - வெகுள்வித்தார்; கோபிக்கச்செய்தவர். இஃதுஉடலென் பதன் பிறவினையாகிய உடற்றென்னும் பகுதியடியாகப் பிறந்த இறந்தகாலவினைமுற்று; இங்கே வினையாலணையும் பெயராய் இரண்டாம் வேற்றுமை யுருபு தொக்கு நின்றது. (கஅ)

கக௯. இடைமருப்பின் விட்டெறிந்த வெஃகங்காழ் மூழ்கிக்
கடைமணி காண்வரத் தோன்றி - நடைமெலிந்து
முக்கோட்ட போன்ற களிறெல்லா நீர்நாடன்
புக்கம ரட்ட களத்து.

எ - து: ஆனைகளின் மருப்பினடுவே விட்டெறிந்த வேல் காம்புகுளித்தலான் வேலின்கடைமணி காட்சிவரத்தோன்றி நடை தளர்ந்து மூன்று கோட்டினையுடையபோன்ற, களிறெல்லாம்; நீர் நாடன் புக்குக்கொன்ற களத்து. எ - று.

(கு-பு.) இடைமருப்பு - மருப்பிடை; கொம்புகளின் நடுவே. காழ் - காம்பு; பிடிக்குமிடம். மூழ்கி - குளித்தலான்; காரணப்பொரு ளில்வந்த இறந்தகால வினையெச்சம். கடைமணி - கடைசியி லுள்ள திரண்ட இடம். இதனைக் கடைமணியென்று வழங்குவ ரென்பது "வேலின், கடைமணிபோற் றிண்ணியான் காப்பும்" (திரிகடுகம். ௩௩) என்பதனுலும்அறியலாகும். காண்வர-காட்சி வர; என்றது, காணும்படியென்றவாறு. காண்வர, அழகுண் டாக எனினுமாம்; காண்-அழகு. மெலிதல்-தளர்தல். இரண்டு கொம்புகளுக்கும் நடுவே தைத்த வேலின்காம்பு ஒருகொம்பு போலத்தோன்றுதலால் 'முக்கோட்ட போன்ற' என்ருர்.(கக)

உO. இருசிறக ரீர்க்கும் பரப்பி யெருவை
குருதி பிணங்கவருந் தோற்ற - மதிர்விலாச்
சீர்முழாப் பண்ணமைப்பான் போன்ற புனலுட
னேராரை யட்ட களத்து.

எ - து: இரண்டு சிறகின்கண்ணுமுள்ள ஈர்க்குகளைப் பரப்பிக் கழுகுகள் குருதிபிணங்களைக்கவர்கின்ற தோற்றம், கலக்கமில்லாத வோசையையுடைய முழாவினைப் பண்ணமைப்பானையொத்த; புனலுடன் நேராரையட்டகளத்து. எ - று.

(கு - பு.) சிறகர் - சிறகு; அர்-ஈற்றுப்போலி. சிறகு - இறகுகளின் தொகுதியாகிய பக்கம். எருவை - கழுகென்னும் பறவை. அதிர்வு - கலக்கம். கக - ஆம் பாடற்குறிப்புப்பார்க்க. சீர் - ஓசை. முழா - மத்தளம். பண் அமைத்தல் - இடக்கண் பஞ்சமச்சுரமும் வலக்கண் சட்சமச்சுரமுமாகச் செய்தல். பண்ணமைப்பானென்பது பண்ணமைப்பான் தோற்றத்தை ஆகுபெயராய் உணர்த்தி நின்றது. "ஆசை பிறன்கட்படலும்" என்புழி, பிறன்பொருளென்னும் பொருளில் பிறனென வருதலும் காண்க. (உO)

உக. இணைவேலெழின்மார்வத் திங்கப்புண் கூர்ந்து
கணையலைக் கொல்கிய யானை - துணையிலவாய்த்
தொல்வலியிற் றீராத் துளங்கினவாய் - மெல்ல
நிலங்கால் கவவு மலைபோன்ற செங்கட்
சினமால் பொருத களத்து.

எ - து: இணைத்தவேல்கள் அழகியமார்பத்தழுந்துதலாற் புண்மிக்கு அம்பினலைப்புகளாற்றளர்ந்த யானைகள் தம்மை மேற்கொண்ட துணைவரையிலவாய்ப் பண்டைத் தம்வலியினீங்கித் தளர்ந்து மெல்ல நிலத்தினைக் காலாலே அகப்படுக்கு மலையைப்போன்ற; செங்கட் சினமால் பொருதகளத்து. எ - று.

(கு - பு.) இணைவேல் - இணைத்தவேல்; இரண்டாகத் தைத்தவேல். அன்றி இணைவேலென ஒருவகைவேல் உண்டெனினும் ஆம்; இங்குதல்-அழுந்துதல்; "வேனிறத்திங்க" என்று பின்வருதலுங் காண்க. கூர்ந்து, மிகுதியென்னும் பொருளுடையகூரென்னும் உரிச்சொலடியாகப்பிறந்த இறந்தகால வினையெச்சம். அலை - அலைத்தல்; முதனிலைத் தொழிற் பெயர். அலையாலென்பது அலைக்கெனவேற்றுமைமயக்கமாய்நின்றது. தொல்லை-பண்டை; பழமை; தீரா - தீர்ந்து; நீங்கி; செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். கவவும் - அகத்திடுதலென்னும் பொருட்டாகிய கவவென்னும்உரிச்சொலடியாகப்பிறந்த செய்யுமென் வாய்பாட்டுப் பெயரெச்சம்; நிகழ்காலத்துவந்தது. மேற்கொண்ட துணைவரென்றது, பாகர்களை. (உக)

உஉ. இருநிலஞ் சேர்ந்த குடைக்கீழ் வரிநுத
லாடியல் யானைத் தடக்கை யொளிறுவா
ளோடா மறவர் துணிப்பத் துணிந்தவை
கோடுகொ ளொண்மதியை நக்கும்பாம் பொக்குமே
பாடா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாடன்
கூடாரை யட்ட களத்து.

எ - து: இருநிலத்தின்கண் விழுந்துகிடந்த குடைகளினருகே கிடந்த வரிநுதலையுடைய வென்றியியல்கின்ற யானையின் றடக்கைகளை யொளிறும்வாளையுடைய மறவர் துணிப்பத் துணிந்தவை, கலைநிறைந்த மதியைச்சென்று தீண்டுகின்ற பாம்பினையொக்கும்; ஒலிநிறைந்த இடிபோன்ற முரசினையுடைய பாய்புனனீர்நாடன் கூடாரை அட்டகளத்து. எ - று.

(கு-பு.) இருநிலம் - பெரியபூமி. வரி - கீற்று; புள்ளியுமாம். நுதல் - நெற்றி. ஆடு - வெற்றி; ஐயம். ஆடியல் யானை, அதுவரை ஐயமடைந்தயானை; "வென்றிக்களிற்றை விரிதாரவன் வென்ற வாறும்" என்னும் சிந்தாமணியை நோக்குக. தடக்கை - வளை வினையுடையகை. ஒளிறுதல்-பிரகாசித்தல். ஓடாமறவர் - புறங்

காட்டி ஓடாத வீரர். துணிப்ப - துண்டமாக்க. கோடு - சந்திர கலை; சந்திரனது தென்கோடு வடகோடெனினும் ஆம். நக்குதல்-தீண்டுதல். பாம்பு - இராகுவென்று பெயர் பெற்றகோள்; இதனை நிலத்தின் நிழலென்ப. பாடு - ஒலி. குடைக்குச் சந்திரனும் அதனருகே கிடக்கும் யானைக்கைக்குப் பாம்பும் உவமை. இவ்வுவமையால், சந்திரக்கிரகணம் பண்டையோரால் அறியப்பட்டிருந்த தென்பது விளங்கும். "அம்முகம் பாம்புசேர் மதி போலப் பசப்பூர்ந்து" என்பது கலித்தொகை. (உஉ)

உங. எற்றி வயவ ரெறிய நுதல்பிளந்து
நெய்த்தோர்ப் புனலு ணிவந்த களிற்றுடம்பு
செக்கர்கொள் வானிற் கருங்கொண்மூப் போன்றனவே
கொற்றவேற் றானைக் கொடித்திண்டேர்ச் செம்பியன்
செற்றாரை யட்ட களத்து.

எ - து: வீரரெடுத்தெறிய நுதல்பிளத்தலால் உதிரப்புனலுள் நிவந்தெழுந்த களிறுகளினுடம்புகள், செக்கர்கொண்டவிசும்பின்கட் கரியமுகிலை யொத்தன; கொற்றவேற் றானைக் கொடித்திண்டேர்ச் செம்பியன் செற்றாரையட்ட களத்து. எ - று.

(கு - பு.) எற்றுதல்-எடுத்தல்; இஃது அரும்பதம். நெய்த்தோர்-இரத்தம். நிவத்தல்-உயர்தல்;உயர்ந்துதோன்றல்,செக்கர்-செந்நிறம். வான்-விசும்பு; ஆகாசம். கொண்மூ-மேகம். கொற்றம்-வெற்றி. தானை - சேனை. கொடி திண் தேர் - கொடியையுடைய வலிய

---

உஉ. "மாலைவாய் நெடுங்குடைமேன் மதயானைக் கைதுணிந்து, கோலநீள் கொழுங்குருதி கொளவீழ்ந்து கிடந்தன, மேலைநீள் விசும்புறையும் வெண்மதியம் விசும்பிழுக்கி, நீலமாசுணத்தோடு நிலத்திழிந்த தொத்தனவே" சீவக. உஉ௩அ.

"மம்மர் விசும்பின் மதியு மதிப்பகையும், தம்மிற் றமொற்றம் போன்றதே-வெம்முனையிற், போர்யானை மன்னர்புறங்கவர்ந்த வெண்குடையைக், கார்யானை யன்ற-ர்க்கை"பெரும்பொரு-

தேர். செற்றார்-கோபித்தவர்; பகைவர் இரத்தம்பாயுமிடத்திற்குச்செவ்வானமும் யானையுடம்புக்குநீலமேகமும் உவமை. (உரு)

உசு. திண்டோண் மறவ ரெறியத் திசைதோறும்
பைந்தலை பாறிப் புரள்பவை - நன்கெனைத்தும்
பெண்ணையந் தோட்டம் பெருவளி புக்கற்றே
கண்ணார் கமழ்தெரியற் காவிரி நீர்நாட
னண்ணாரை யட்ட களத்து.

எ - து: திண்ணிய தோளையுடையமறவர் வாளாலெறிதலால் திசைதோறும் கருந்தலைகள் சிந்தி நிலத்தின்கட் புரண்டுகிடப்பவையெல்லாம், மிகவும் பனங்காட்டின்கட் பெருங்காற்றுப் புக்கது போன்றது; கண்ணிற்கு ஆர்ந்த காட்சியையுடைய கமழ்தெரியற் காவிரிநீர்நாடன் நண்ணாரையட்ட களத்ின்கண். எ - று.

(கு.- பு.) பாறுதல் - நிலைகுலைதல்; சிதறுதல்; "மாரி தன்னைக், காலிரைத் தெழுந்து பாறக் கல்லெனப் புடைத்த தேபோல்" என வருதல்காண்க. நன்கு-மிகவும். எனைத்தும்-எல்லாம். பெண்ணை-பனைமரம். தோட்டம் - தோப்பு; இங்கே காடென்று பொருள் கூறினார். வளி - காற்று. புக்கதற்றென்பது, புக்கற்றென மருவிநின்றது. ஆர்தல் - நிறைதல். கமழ்தல் - மணம்வீசுதல் தெரியல் - மாலை. நண்ணார்-பகைவர். பகைவருடைய சேனைப் பரப்பிற்குப்பனங்காடும், சோழன்மறவருக்குச்சண்டமாருதமும் விழும்பகைவர்தலைக்கு உதிரும் பனம்பழமும் உவமை. (உசு)

உசு. "பொருங்களத் தாடவர் பொருவில் பைந்தலை, யரும்பெறற் கண்ணியோ டற்று வீழ்வன, கருங்கனிப் பெண்ணையங் கானங் கால்பொர, விருங்கனி சொரிவன போன்ற வென்பவே" சீவக. உஉஉஎ.

"இலங்கையர் கோனைப், பானுநேர்சரத்தாற்பனங்கனிபோலப் பருமுடி யுதிரவில் வளைத்தோன்"பெரியதிருமொழி. (க) க: எ. "முடியழி பிழிபு.........நீளிரும் பனைமிசைப், பலபதினாயிரங் குலைதரையுதிர்வபோல்,.........நிலஞ்சோர" பரி. உ: சுo -சுஎ.

உ௫ மலைகலங்கப் பாயு மலைபோ - னிலைகொள்ளாக்
குஞ்சரம் பாயக் கொடியெழுந்து - பொங்குபு
வானந் துடைப்பன போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து.

எ-து: மலைகள் கலங்கப்பாயும் மலைகள்போல நிலைமைகொண்டு குஞ்சரங்கள்பாய்தலான் அவற்றின்மிசைக்கொடிகள், எழுந்துமிக்கு வானத்தைத் துடைப்பனபோன்ற; புனனாடன் மேவாரை யட்ட களத்து. எ - று.

(கு - பு.) பாயும் - பாய்கின்ற; பெயரெச்சம். கொள்ளா - கொண்டு செய்யாவென்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். பாய - பாய்தலால்; செயவெனெச்சம், காரணப்பொருட்டாய் நின்றதென்பர். பொங்குபு - மிகுந்து; செய்பு என்னும் வாய் பாட்டு இறந்த கால வினையெச்சம். மேவார் - விரும்பாதவர்; பகைவர். (உ௫)

---

உச. "பெண்ணைத் தீங்குலைத் தொடுத்த, விளைவுறு தீங்கனி வீழ்ச்சி யேய்ப்பத்..............தலைபல புரளவும்" பெருங். (௧) சகு: உ0 - உஉ.

"பெண்ணை நெற்றிக் கனிகள்போற் றலைகள் வீழ்ந்த" மேரு மந்தர. பலதேவர். க௫.

உ௫ "களிறுமலைந் தன்ன கண்கூடு துறுகல்" மலை. ௩அச.

"அஞ்சன வரைசிற குடைய போல்வன, மஞ்சிவர் குன்றெனை மலைந்த வேழமே" சீவக. உஉ௩0.

"மலையே மலையோடு மலைந்தனபோற், கொலைவேழமொ டேற்றன குஞ்சரமே" சூளா. அரசியற். க0ச.

"கருப்புடைக் கைகளாற் புடைத்துக் கண்களு, ணெருப்பொடு நெருப்பெதி ரெறிப்ப யானைகண், 'மருப்பொடு மருப்பிடை மிடைந்து மான்றரோ, பொருப்பொடு பொருப்பவை பொருவ போன்றவே" சூளா. அரசியற். கச௫.

உசு. எவ்வாயு மோடி வயவர் துணித்திட்ட
கைவாயிற் கொண்டெழுந்த செஞ்செவிப் புன்சேவ
லைவாய் வயநாகங் கவ்வி விசும்பிவருஞ்
செவ்வா யுவணத்திற் றோன்றும் புனனாடன்
றெவ்வரை யட்ட களத்து.

எ - து: எவ்விடத்துஞ்சென்று வீரர்துணித்த கைகளைத் தம் வாயிற்கொண்டெழுந்த செஞ்செவியினையுடைய புல்லிய பருந்தின் சேவல்கள், ஐந்துவாயையுடைய வலியநாகத்தைக்கவ்வி விசும்பிலே பாய்ந்துசெல்லுஞ் செவ்வாய்க் கருடனைப்போலத் தோன்றும்; புனனாடன் தெவ்வரையட்டகளத்து. எ - று.

(கு - பு.) வய - வலிமை. நாகம் - நல்ல பாம்பு. விசும்பு - ஆகாயம். இவர்தல் - செல்லுதல். உவணம் - கருடன். தெவ்வர் - பகைவர். ஐந்து விரல்களையுடைய கைக்கு, ஐந்து தலைகளையுடைய பாம்பும் அக்கையைக் கவ்வியெழும் [1] பருந்துக்கு அஞ்சுதலை நாகத்தைக் கவ்வியெழும் கருடனும் உவமை. (உசு)

உஎ. செஞ்சேற்றுட் செல்யானை சீறி மிதித்தலா
லொண்செங் குருதி தொகுபீண்டி நின்றவை
பூநீர் வியன்மிடாப் போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து.

எ - து: உதிரத்தாற் சேறுபட்ட செஞ்சேற்றின்கட் செல்கின்ற யானைகள் வெகுண்டு மிதித்தலாற் குழித்தவிடங்களில் தொக்கு ஈண்டிநின்ற ஒண்செங்குருதிகள், சிவந்த மலர்களையாக்கிய நீர் மிடாப்போன்ற; புனனாடன் மேவாரை யட்டகளத்து. எ - று.

---

உசு. "தொடித்திண்டோள், படர்தீரக் கொண்டெழுந்த பறவைகள் படநாக, முடனேகொண் டெழுகின்ற வுவணப்பு ளொத்த னவே" சீவக. உஉசஉ.

(கு-பு.) சிறி- வெகுண்டு; கோபித்து. தொகுபு ஈண்டி - தொக்கீண்டி; ஒன்றாய்ச்சேர்ந்து. தொகுபு, செய்பென்னும் வாய்பாட்டு இறந்த கால வினையெச்சம். வியல் - அகலம். மிடா - வாயகல முள்ளதொரு பாத்திரம். இது தாழியென்றும் சொல்லப் படும். யானை கோபித்து மிதித்த இடம் குழியாதல் இயல்பு. அக்குழிகளில் தேங்கி நிற்கும் இரத்தங்கள் செம்பூக்களை உண் டாக்கிய மிடாக்களை ஒத்தனவென முடியும். இதில் நின்றவை யென்பதற்கு, நின்ற குழிகளென்று பொருள்கொண்டு அவை மிடாவை யொத்தன வென்பது நேர். மிடாவில் குவளை முத லிய நீர்ப்பூக்களைப் பயிர்செய்வதுண்டு. அது 'தாழிவாய்க் குவளை' என்பதனால் அறியலாகும். (உஎ)

உஅ. ஓடா மறவ ருருத்து மதஞ்செருக்கிப்
பீடுடை வாளர் பிணங்கிய ஞாட்பினுள்
கேடகத்தோ டற்ற தடக்கைகொண் - டோடி
யிகலன்வாய்த் தூற்றிய தோற்ற - மயலார்க்குக்
கண்ணாடி காண்பாரிற் றோன்றும் புனனாட
னண்ணாரை யட்ட களத்து.

எ - து: ஓடாதவீரர் வெகுண்டு களிப்பானேமிக்குப் பெருமை யுடைய வாளினையுடையராய்ப் பொருத போரின்கட் கேடகத்தோ டற்ற தடக்கைகொண்டோடி நரிகள் வாயின்கட்கவ்விய தோற்றம், அயனின்றார்க்குக் கண்ணாடி காண்பார்போலத் தோன்றாநிற்கும்; புனனாடன் நண்ணாரையட்டகளத்து. எ - று.

(கு - பு.) ஓடா மறவர் - போர்க்களத்தில் தோற்று முதுகுகாட்டி ஓடாத வீரர். "ஓடாத தானை நளன்" எனவருதலும் காண்க. மதம் - களிப்பு; மகிழ்ச்சி. இவர்க்குப் போர் பெறின் மகிழ்தல் இயல்பு; "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்" என்பது நோக்குக. செருக்குதல் - மிகுதல். பிணங்குதல் -

---

உஅ. "அற்றதோர் கேட கக்கை கவ்விய நரிகண் ணாடி, பற்றிய குறளி செல்வா டன்முகம் பார்த்த போலும்" (மேருமந்தர. பலதேவன். கஎ.

இருவர்படையும் பின்னிற்போலக் கலந்துநிற்றல்; தாற்பரியமாகப்பொருதஎன்று கூறினர். கேடகம்-போர்செய்பவன் பகைவர் படைக்கலங்கள் தன்மேலணுகாதபடி தன்னைக் காத்துக்கொள்ளும் ஓராயுதம். இகலன்-நரி. துற்றுதல்-வாய்க் கொள்ளுதல்; கவ்வுதல். "கண்ணாடி காண்பாரின்" என்பதனால் கண்ணாடி காண்டல் பண்டும் இந்நாட்டவர் அறிந்த வழக்கென்பது புலனும்; "மாசறக் கண்ணடி வயக்கி வண்ணமூர், தேசு மொளியுந் திகழநோக்கி", "நிழல்காண் மண்டில நோக்கி" என வருவனவும் காண்க. (உஅ)

உகூ. கடிகாவிற் காற்றுற் றெறிய வெடிபட்டு
வீற்றுவீற் றோடு மயிலினம்போ - ணூற்றிசையுங்
கேளி ரிழந்தா ரலமருப செங்கட்
சினமால் பொருத களத்து.

எ - து: மிக்ககாவின்கட் காற்றுமிக் கெறிதலான் வெருவித் திறந்திறமாகவோடு மயிலினம்போல நான்கு திக்கின்கண்ணும் கொழுநரை யிழந்த மகளிர், அலமராநிற்பர்; செங்கட்சினமால் பொருதகளத்து. எ - று.

(கு - பு.) கடி - மிகுதி; உரிச்சொல் உற்று - மிகுதியென்னும் பொருட்டாகிய உறுவென்னும் உரிச்சொலடியாகப்பிறந்தவினையெச்சம். வெடிபடுதல் - வெறித்தல்; அஞ்சியோடுதல். வீற்று வீற்று - திறந்திறம்; வேறு வேறு. கேளிர் - கொழுநர்; கணவர். அலமருப, அலமா என்னும்பகுதியடியாகப்பிறந்த பகரவீற்றுப் பலர்பால் வினைமுற்று. அலமருதல் - சுழலுதல். எறிதலான்- அடித்தலால். வெருவுதல்-அஞ்சுதல். இங்கே மகளிரென்றது. உடன் வந்திருந்த பரத்தையரை. (உகூ)

௩௦. மடங்க வெறிந்து மலையுருட்டு நீர்போற்
றடங்கொண்ட வொண்குருதி கொல்களி றீர்க்கு
மடங்கா மறமொய்ம்பிற் செங்கட் சினமா
லடங்காரை யட்ட களத்து.

எ - து: மலைகளை மறிய எறிந்துருட்டு நீர்போலப் பெருமை கொண்ட ஒள்ளியகுருதி; கொல்களிறுகளை இழாநிற்கும்; கெடாத மறமொய்ம்பினையுடைய செங்கட்சினமால் அடங்காரைக்கொன்ற களத்தின்கண். எ - று.

(கு-பு.) மடங்குதல் - மறிதல்; புரளுதல். நீர்-ஆற்று வெள்ளம்; தடம்; பெருமை. யானையை உருட்டும் இரத்த வெள்ளத்திற்கு மலையை உருட்டும் நீர் வெள்ளம் உவமை. மடங்காமை - கெடாமை; தோற்றோடாமை. மறம் - வீரம். மொய்ம்பு-தோள்; வலியுமாம். அடங்கார் - பகைவர். (௩௦)

௩௧. ஓடா மறவ ரெறிய நுதல்பிளந்த
கோடேந்து கொல்களிற்றின் கும்பத் தெழிலோடை
மின்னுக் கொடியின் மிளிரும் புனனாடன்
ஒன்னாரை யட்ட களத்து.

எ - து: அஞ்சா வயவர் எறிய நெற்றிபிளந்த கொம்பேந்தியிருந்த கொல்களிற்றின்மத்தகத்துள்ள எழிற்பட்டம், முகிலின்கண் மின்னுக்கொடிபோல ஒளிவிடாநிற்கும்; புனனாடன் ஒன்னாரை யட்டகளத்தின்கண். எ - று.

(கு-பு.) ஓடுதல் அஞ்சினர் தொழிலாதலால், ஓடா மறவரென்பதற்கு அஞ்சாத வீரரென்ற பொருள் கூறினர். எழில்-அழகு. ஓடை-யானைநெற்றியிலணியும் பட்டம். மின்னுக்கொடி - மின்னல். மிளிர்தல்-விளங்குதல். ஒன்னார் - பகைவர். (௩௧)

௩௨. மைமின்மா மேனி நிலமென்னு நல்லவள்
செய்யதுபோர்த்தாள்போற்செவ்வந்தாள் - பொய்தீர்ந்த

௩௨. "பூண்குலாம் வனமுலைப் பூமிதேவிதான், காண்கலேன் கடியன கண்ணினி னொலெனச், சேண்குலாம் கம்பலஞ் செய்ய தொன்றினன், மாண்குலாங் குணத்தினன் மறைத்திட்டாளரோ" சீவக. உ௨௩௩.

பூந்தார் முரசிற் பொருபுன னீர்நாடன்
காய்ந்தாரை யட்ட களத்து.

எ - து: குற்றமில்லாத அழகியமேனியையுடைய நிலமென்னு நல்லவள், செய்யதொன்றினைப் போர்த்தாள் போலச் சிவந்தாள்; பூந்தாரினையுமுரசினையுமுடைய பொய்தீர்ந்த பொருபுனனீர்நாடன் வெகுண்டாரைக் கொன்ற களத்தின்கண். எ - று.

(கு - பு.) மை - குற்றம். மா - அழகு. நிலமென்னு நல்லவள் - பூமிதேவி. செய்யது - சிவந்த போர்வை. செவந்தாளென்பது செவ்வந்தாளெனச் செய்யுள் விகாரமாய் நின்றது. செவ்வரல் - சிவத்தலென்பாருமுளர். அரசர் சூடுவன அவர் முரசுக்கும் சூட்டுவது மரபாதலால் 'பூந்தார் முரசு' என்பதற்கு, பூந்தாரை யணிந்த முரசென்றலுமாம். பொய் தீர்ந்த பொருபுனனீர்நாடனென்றது. பொய்யைச் சொல்லுதலும் கேட்டலும் விட்ட சோழனென்றபடி. "வசையில் புகழ் வயங்கு வெண்மீன், றிசைதிரிந்து தெற்கேகினுந், தற்பாடிய தளியுணவிற் புட்டேம்பப் புயன்மாறி, வான்பொய்ப்பினுந் தான்பொய்யா, மலைத்தலைய கடற்காவிரி" என்பதனால், பொய்தீர்ந்த காவிரி என்றலுமாம். (௩௨)

௩௩. பொய்கை யுடைந்து புனல்பாய்ந்த வாயெல்லா
நெய்த லிடையிடை வாளை பிறழ்வனபோ
லைதிலங் கெஃகி னவிரொளிவா டாயினவே
கொய்சுவன் மாவிற் கொடித்திண்டேர்ச் செம்பியன்
றெவ்வரை யட்ட களத்து.

---

௩௩. "வாளை வாளிற் பிறழ" நற். ௩௯0: க.

"வாளை பிறழுங் கயங்கடுப்ப வந்தடையா, ராளமர் வென்றி யடுகளத்துத் - தோள்பெயராக், காய்ந்தடு துப்பிற் கழன்மறவ ராடினார், வேந்தொடு வெள்வாள் விதிர்த்து" பு-வே. தும்பை. உக.

எ-து: பொய்கைக்கரையுடைதலால் அதன்கண்முன்பு நீர்பரந்த விடமெல்லாம் நெய்தற்பூக்களினடுவே வாளை பிறழ்வனபோலே ஐதாயிலங்காநின்ற வேல்களோடு அவிராநின்ற ஒளியினையுடைய வாள்கள் பரந்தன; உளைகொய்யப்பட்ட சுவலையுடைய மாவையும் கொடிக்திண்டேரையுமுடைய செம்பியன் தெவ்வரை யட்டகளத் தின்கண். எ - று.

(கு - பு.) பொய்கை - மானிடராக்காத நீர்நிலை யென்பர், நச்சினார்க்கினியர்; இது நீர்நிலைக்குப் பொதுவாயும் வரும். உடைந்து என்பது காரணப்பொருளில் வந்த இறந்தகால வினையெச்சம். நெய்தற் பூ - ஒரு நீர்ப்பூ. வாளை - ஒருவகைமீன். ஐது - அழகிது; மெல்லிதுமாம். அவிர்தல் - விளங்குதல். தாயின - பரந்தன. உளை - பிடரிமயிர். சுவல்-பிடரி. வேலுக்கு நெய்தற் பூவும், வாளுக்கு வாளைமீனும் இரத்தம் பரந்த போர்க்களத்துக்குப் புனல் பரந்த இடமும் உவமை. (௩௩)

௩௪. இடரிய ஞாட்பினு ளேற்றெழுந்த மைந்தர்
சுடரிலங் கெஃக மெறியச்சோர்ந் துக்க
குடர்கொடு வாங்குங் குறுநரி கந்திற்
றொடரொடு கோணாய் புரையு மடர்பைம்பூட்
சேய்பொரு தட்ட களத்து.

எ - து: தொடர்ந்து மிடைந்தபோரின்கண் எதிர்த்தெழுந்த வீரர் ஒளிவிளங்காநின்ற வேல்களை யெறிதலாற் சோர்ந்து நிலத்தின்கண் உக்க வீரர்குடர்களைக் கவ்விக்கொண்டுவாங்குகின்றகுறுநரிகள், தூணிற்கட்டப்பட்ட சங்கிலியோடு நின்ற கோணாய்களையொக்கும்;

---

௩௩. "வலையவர் முன்றிற் பொங்கி வாளென வாளை பாய" சீவக. ௨௫௮௩.

"வாளென வாளைகள் பாய" கம்ப. பம்பை. ௨௨.

௩௪. " குடர்வாங்கு குறுநரிகள் கொழுநிணப் 'புலாற் சேற்றுட், டொடர்வாங்கு கதநாய்போற் றோன்றின" சீவக. ௨௨௪௨.

ஐதாகப்பண்ணப்பட்ட பூணினையுடைய சேய் பொருதட்டகளத்தின் கண். எ - று.

(கு - பு.) இடர்தல் - தொடர்ந்து நெருங்குதல். இஃது அரும்பதம். பணம், படமென நிற்றல்போலக் கொத்தென்னும் பொருளுடைய இணரென்பது இடரென வல்லினமாய்மாறிநின்றது போலும். "இடரெரி" என வருதலும்நோக்குக. இணரிய ஞாட்பினு ளென்றே சிலர் பதிப்பித்துள்ளார். எற்றல் - எதிர்த்தல். உகுதல் - கீழ்விழுதல். கந்து - தூண். தொடர் - சங்கிலி. கோணாய் - கொள்ளுதலில் வல்ல நாய்; வேட்டை நாய் என்றபடி. அடர் - ஐது; மெல்லிது. பூண் - ஆபரணம். வீரனுக்குத் தூணும் அவன் குடரைக் கவ்வியிழுக்கும் நரிக்கு அத்தூணிலே தன்னைக் கட்டியிருக்கும் சங்கிலியைக் கவ்வியிழுக்கும் கோணாயும் உவமை. "கழுமலந் தந்த, பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி" என்பதை நோக்கி, அடர் பைம்பூட் சேய் - பெரும்பூட் சென்னியென்பாரு முளர். (ரு௪)

ருரு. செவ்வரைச் சென்னி யரிமானோ டவ்வரை
யொல்கி யுருமிற் குடைந்தற்றான் - மல்கிக்
கரைகொன் றிழிதருங் காவிரி நாட
னுரைசா லுடம்பிடி மூழ்க வரசோ
டரசுவா வீழ்ந்த களத்து.

எ - து: செய்யவரைகளி னுச்சியின்கண்ணுள்ள அரிமாவினோடு கூட அசசெவ்வரைகள் தளர்ந்து உருமேற்றிற் கழிந்தாற்போலுமால்;

ருரு. "வரையோடுமுருமிடிப்பவளையெயிற்றுக் கொழுங்குருதி, நிரையுளை யரிநன்மா நிலமிசைப் புரள்வனபோற், புரையறுபொன் மணியோடைப் பொடிப்பொங்கப் பொருதழிந், தரைசோடு மரசுவா வுடுகளத்து ளாழ்ந்தனவே" சீவக. உஉசரு.

அரசு உயர்திணைக்கே யன்றி அஃறிணைக்கும் வரும் என்பதற்கு "அரசுவா வீழ்ந்த களத்து" என்பது மேற்கோள்; தொல். கிளவி. சூ. இள. நச்.

மிக்குக் கரைகளைச் சிதைத்திழியாநின்ற காவிரிநாடனுடைய புகழமைந்த வேல்குளிப்ப அரசர்களோடு பட்டம்பெற்ற யானைகள் வீழ்ந்த; களத்தின்கண். எ - று.

(கு - பு.) செவ்வரை - சிவப்பாகிய மலை; செங்குத்தான மலையுமாம். சென்னி - சிகரம். அரிமான் - சிங்கம். ஒல்குதல் - தளர்தல். உருமேறு - இடி. மல்குதல் - மிகுதல். உரை - புகழ். சாலுதல் - அமைதல். உடம்பிடி - வேல். அரசுவா-பட்டத்தியானை. யானைக்கு மலையும் அதன்மேலிருந்த அரசர்க்குச் சிங்கமும் வேலேற்றால் விழும் யானைக்கு இடியேற்றால் விழும் மலையும் உவமை. (ரு௫)

ரு௬. ஓஓ உவம னுறழ்வின்றி யொத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
மாவுதைப்ப மாற்றார் குடையெலாங் கீழ்மேலா
யாவுதை காளாம்பி போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து.

எ - து: சிறப்புடைத்தாகவே ஒப்புமை மாறுபா டின்றிப் பொருந்திற்று, காவிரிநாடன் கழுமலமென்கிற ஊரினைக்கொண்டநாள் புனனாடன் மேவாரையட்டகளத்தின்கண் புரவிகளானுதைக்கப்பட்ட மாற்றார் குடைகளெல்லாம் கீழ்மேலாய் உதைக்கப்பட்ட காளாம்பி போன்றன. எ - று.

---

ரு௬. "களவழித், தேரோர் தோன்றிய வென்றியும்" என்பதனுரையில் களம்பாடுதலும் களவேள்வி பாடுதலு மூன்றென்று வகுத்து, களம்பாடியதற்கு, "ஓஓவுவமை..............மேவாரை யட்டகளத்து" என்பதனை மேற்கோள் காட்டி இஃது ஆசிரியர் பொய்கையார் வாக்கு என்றனர். இளம்பூரணர். 'களவழி நாற்பது' புலவர் களவழியைத் தோற்றுவித்தது என்று கூறி அதற்கு, "ஓஒ வுவமன்..............களத்து" என்பதை மேற்கோள் காட்டினர், நச்சினார்க்கினியர்; (தொல். புறத். சூ. ௨௧.)

(௩ - டு) ஒடு, குறிப்பிடைச்சொல்; சிறப்புணர்த்தி நின்றது. உவமன் - உவமை; 'உவமனி லிறந்தன' எனப் பெரியார் கூறுதலும் நோக்குக. உறழ்வு - மாறுபாடு. ஒத்தல் - பொருந்துதல். கழுமலம் - சேரநாட்டிலுள்ள தொருநகர். "நற்றேர்க் குட்டுவ ன் கழுமலத் தன்ன, அம்மா மேனி" "குடையொடு கழுமலங் தந்த நற்றேர்ச் செம்பியன்" என்ற சான்றோர் வாக்கால் இது துணியலாகும். இதனை அறியாது சோழநாட்டிலுள்ள சீகாழி யென்பார் சிலர்; அது சிறிதும் பொருந்தாது. மா, புரவி - குதிரை. மாற்றார் - பகைவர். ஆ - பசு. காளாம்பி - குடைக்காளான்; இது காய்க்குடையென்றும் வழங்கப்படும். மேவார் - பகைவர். குதிரை யுதைத்தலாற் கீழ் மேலாய்க் கிடக்கும் குடைக்கு, பசு உதைத்தலாற் கீழ்மேலாய்க் கிடக்கும் குடைக் காளான் உவமை. (௩௬)

௩௭. அரசர் பிணங்கான்ற நெய்த்தோர் முரசொடு
முத்துடைக் கோட்ட களிறீர்ப்ப - வெத்திசையும்
பௌவம் புணரம்பி போன்ற புனனாடன்
றெவ்வரை யட்ட களத்து.

எ - து: அரசர் பிணங்க ளுகுக்கப்பட்டவுதிரங்கள் முரசோடு கூட முத்துடைக்கோட்டவாகியகளிறுகளை யீர்ப்பன, எல்லாத் திசையும் கடலையும் அக்கடலைப்புணர்ந்த நாவாய்களையும் போன்ற; புனனாடன் றெவ்வரையட்ட களத்தின்கண். எ - று.

---

௩௭. யானைக்கு அம்பி உவமை யாதலைக் கீழுள்ளவற்றாலும் அறிக.
"கடுங்காற் றெடுப்பக் கல்பொரு துரை இ, நெடுஞ்சுழிப் பட்ட நாவாய் போல,............... ...கந்துநீத் துழிதரும் கடாஅ யானையும்" மதுரைக்காஞ்சி. ௩௭அ - ௩௮௩.
"திரைபொரு முந்நீ, ரியங்குதிசை யறியா தியாங்கணு மோடி, மயங்குகா லெறிந்த வங்கம் போல,........................ கால் வேகங் களிமயக் குற்றென" மணி. ௪: ௩௨ - ௩௪.

(௩-௫) காலுதல், உகுத்தல் - சொரிதல். பிணங்க ளுகுக்கப்பட்ட -பிணங்களாற்சொரியப்பட்ட. செப்தோர், உதிரம் - இரத்தம். முத்துடைக் கோட்ட - முத்தைத் தன்னிடத்துடைய தந்தங்களையுடையன. மிக முதிர்ந்த *யானைத் தந்தத்தில் முத்து உண்டாகுமென்பர். ஈர்ப்ப - ஈர்ப்பன; இழுக்கப்படுவன. பௌவம் - கடல். அம்பி, நாவாய் - மரக்கலம். இரத்தவெள்ளத்துக்குக் கடனீரும், அஃது இழுக்கும் யானைகளுக்கு அக்கடலில் இயங்கும் மரக்கலங்களும் உவமை. (௩௭)

---

௩௭. "மாக்கடற் பெருங்கலங் காலின் மாறுபட், டாக்கிய கயிறரிந்
தோடி யெங்கணும், போக்கறப் பொருவன போன்று நீப்
படத், தாக்கின வரசுவாத் தம்மு ளென்பவே" சீவக. ௨௨௩௧.
"எயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற் - பனிக்கடலுட்,
பாய்தோய்ந்த நாவாய்போற் றோன்றுமே பெங்கோமான்,
காய்சினவேற் கிள்ளி களிறு" முத்தொள்.

* யானைத் தந்தத்தில் முத்து உண்டாகுமென்பது கலி (௪௦) பக்கம் 220: 7-ஆவது குறிப்பில் நூலளவையால் விளக்கப்பட்டுள்ளது. இது கவிமரபாதலேயன்றி உண்மையுமாய்க் காட்சியளவைக்கு முரியதென்பது, இலங்கைத்தீவில் யானைத்தந்தத்திலிருந்து சில காலத்துக்குமுன் எடுக்கப்பட்ட முத்து இன்ன இடத்து இருக்கிறதென்றும் சமீபகாலத்தில் எடுக்கப்பட்டமுத்து இன்னஇடத்தில் இருக்கிறதென்றும் இதனில் யானையினுருவமும் தோன்றுகிறதென்றும் சிலோன் மார்னிங் லீடரில் எழுதப்பெற்றிருக்கும் அருமையான செய்தியால் அறியப்படுகிறது. . 1927-ஆம் வருஷம் அக்டோபர்மாதம் முதல்தேதி 'மெட்ராஸ் மெயில்' என்னும் பத்திரிகையில் அன்பர் ம.ா.ா.ஸ்ரீ ராவ்பஹதூர் கிருஷ்ணராவ் பான்ஸலே அவர்கள் M. R. A. S., Secretary to the Commissioner for Govt. Examinations,[1] Madras; எழுதியிருப்பதில் இதுவிஷயமானதும் பார்க்கத்தக்கது.

கூஅ. பருமப் பணைபெருத்திற் பல்யானை புண்கூர்ந்
திருமெறி பாம்பிற் புரளுஞ் - செருமொய்ம்பிற்
பொன்னார மார்பிற் புனைகழற்காற் செம்பியன்
றன்னாரை யட்ட களத்து.

எ — து: பண்ணினையும் பெருத்த வெருத்தினையு முடைய யானைகள் புண்மிகுதலான் உருமேற்றானெறியப்பட்ட பெரும்பாம்பு போலப் புரளாநின்ற; செருவலியினையும் பொன்னாரமார்பினையும் புனைந்தகழற்காலினையுமுடைய செம்பியன் அடையாரைக்கொன்ற களத்தின்கண். எ - று.

(கு - பு) பருமம், பண் - யானையின் பிடரியின்மேல் இடப்படும் மெத்தை. பணை — பெருமை. எருத்து - புறக்கழுத்து; எருத்த மென்றும் வழங்கும். கூர்ந்து; கூர; - மிகுதலான். தன்னார், அடையார் - பகைவர். முன்பு கஙு: ஆம்பாடலில் யானையின் துணிக்கப்பட்ட கை புரளுதற்கு உருமெறிபாம்பு புரளுதல் உவமையாய் வந்துள்ளது. (கூஅ)

கூகூ. மைந்துகால் யாத்து மயங்கிய ஞாட்பினுட்
புய்ந்துகால் போகிப் புலான்முகந்த வெண்குடை
பஞ்சிபெய் தாலமே போன்ற புனனாடன்
வஞ்சிக்கோ வட்ட களத்து.

எ - து: தங்கண்மறவலிகள் காலைப்பிணித்தலால் போகாது மிடைந்தபோரின்கண், காம்புபறிந்துபோதலாற் செந்தசையை

கூஅ. "அவ்வியானைதான்................உத்தி பொறித்த புனைபூண் "பருமத்து" கலி. கஎ: கO - கசு.
"உருமெறி பாம்பிற் புரளும்" களா. கஙு: கூ.
"பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளி"யா. வி. மேற்.

கூகூ. "பருத்திப் பெண்டின் பனுவ லன்ன, நெருப்புச்சினந் தணிந்த நிணம்" புறம். கஉகூ: க-உ.

மூகந்த வெண்குடைகள், செம்பஞ்சிபெய்யப்பட்டதாலமேபோன்றது; புனனுடன் வஞ்சிக்கோவைக் கொன்றகளத்து. எ - று.

வஞ்சிக்கோ - கருவூரரசன்; வஞ்சி - கருவூர்.

(கு - பு) யாத்து - யாக்க; பிணித்தலால். மயங்கிய - மிடைந்த, நெருங்கின. ஞாட்பு - போர்; போர்க்களம். புய்த்து-பறித்து; இச் சொல்லைப்பற்றிய செய்திகள் கலி (௩௮) பக்கம் 210: உ-ஆம் குறிப்பில் விளக்கமாகக் குறிக்கப்பெற் றிருக்கின்றன. கால் - (குடையின்) காம்பு. போகி - போக; போதலால். புலால் - தசை. பஞ்சி - பஞ்சு. தாலம் - உண்கலமாகிய ஒரு வகைப் பாத்திரம். புனனுடன் - சோழன். மறவலிகள் - வீரத் தாலுளவாகிய வலிமைகள். மறவலிகள் காலைப்பிணித்தலால் என்றது, பிறக்கடியிட்டார்மேற்செல்ல மனம்வாராமையால் காலெழாது நிற்றலை. செந்தசை - சிவப்பாகியதசை. (௩௯)

௪0. வெள்ளிவெண் ணாஞ்சிலான் ஞால முழுவனபோ
லெல்லாக் களிறு நிலஞ்சேர்ந்த - பல்வேற்
பணைமு ழங்கு போர்த்தானைச் செங்கட் சினமால்
கணைமாரி பெய்த களத்து.

எ - து: வெள்ளியாற் செய்யப்பட்ட வெண்கலப்பையான் நிலத்தையுழுவனபோல எல்லாக்களிறுகளும் நிலத்தைச்சேர்ந்தன; பல வேலையும் முரசுமுழங்காநின்ற போர்த்தானையையுமுடைய செங்கட்சினமால் அம்புமாரிபெய்த களத்தின் கண். எ - று.

(கு - பு) நாஞ்சில் - கலப்பை. ஞாலம் - நிலம். சேர்ந்த - சேர்ந்தன. 'பல்வேல்' என்பதற்கு, பலகாலுமென்று பொருளும், வேலை வேல்; ஈறுதொகுத்தலென்று இலக்கணமுங்கூறுதல் சிறந்த

௪0. "எழில்வேழம், வற்னுழு நாஞ்சில்போன் மருப்பூன்றி நிலஞ் சேர" கலி. அ ௪-ரு.

"யானைத், தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து, நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள" புறம், கக: ௯-க.

தன்று. அரசரைப் பல்வேலுடைய ரென்பர்; "பல்வேற்றிரை யற் படர்குவி ராயின்" என வருதலும்நோக்குக. பணை - முரசு. தானை - சேனை. மாரி - மழை. மேலே எடுத்தகை மேழிபோல வும் கீழூன்றிய வெண்மருப்பு வெள்ளியகுத்திபோலவும் தோன் றுதலால் 'நாஞ்சிலால் ஞால முழுவனபோல்' என்றார். (௪௦)

௪௧. வேலிறந் திங்க வயவரா லேறுண்டு
காலிலை கொள்ளாக் கலங்கிச் - செவிசாய்த்து
மாநிலங் கூறு மறைகேட்ப போன்றவே
பாடா ரிடிமுரசிற் பாய்புன லீர்நாடன்
கூடாரை யட்ட களத்து.

எ - து: வேல் மார்பின்கணழுந்த வீரரானேறுண்டு காறளர்ந்து வீழ்ந்து செவிகளைச்சாய்த்து, மா, நிலமகள்கூறும் மறைகேட்பன போன்றன; பாடா ரிடிமுரசிற் பாய்புனலீர்நாடன் கூடாரை அட்ட களத்தின்கண், எ - று.

(கு - பு) நிறம் - மார்பு. இங்குதல், தங்குதலாதலால், நிறத்திங்க என்பதற்கு மார்பின்க ணழுந்த என்று பொருள் கூறினார். 'இணைவேலெழின்மார்வத் திங்க' என்னும் 21-ஆமசெய்யுட் பகுதியும் அதனுரையும் நோக்குக. வயவர் - வீரர். ஏறுண்டு - எறியப்பட்டு. நிலைகொள்ளா - நிற்றலைக் கொள்ளமாட்டா மல்; விழுந்து. கொள்ளா, ஈறுகெட்ட எதிர்மறை வினையெச் சம்; எதிர்மறை முற்று, எச்சப் பொருளில் வந்ததென்றலு மாம். கலங்கி-தளர்ந்து; மனமயங்கி. 'கலங்கி நிலைகொள்ளா-

---

௪௧. "இணைவேலெழின்மார்வ திங்கப்புண் கூர்ந்து" களவழி ௨௧.
" தோறமிபு, வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த், துண்ணா துயங்கு மாசிந் தித்தும்" முல்லை ௭௨-௭௪.
"வெம்பரி மான்செவி வீர மந்திர, மிம்பர்நம் மிடர்கெட விரண் டும் வல்லையாய், நம்பிநீ மொழிகென" சீவக. ௭௪௨.

என மாறிக்கூட்டுக. மா, இங்கே குதிரை; இதன் ஒப்புமைப் பகுதிகளையும் அவற்றின் உரைகளையும் நோக்குக. மா, எறூண்டு தளர்ந்து விழுந்து செவிசாய்த்து மறைகேட்பனபோன்ற என முடிக்க. மறை - மந்திரம். பாடு - பெருமை; ஒலியுமாம். இடி முரசு - இடியொலிபோன்ற ஒலியினையுடைய முரசு; இது வீரமுரசு. (௪௧)

சோழன் செங்கணானுஞ் சேரமான் கணைக்காலிரும் பொறையுந் [திருப்]போர்ப்புறத்துப் பொருதுடைந்துழிச் சேரமான் கணைக்காலிரும் பொறையைப் பற்றிக்கொண்டு சோழன் செங்கணான் சிறைவைத்துழி,

பொய்கையார் களம்பாடி வீடுகொண்ட

*களவழிநாற்பது

முற்றிற்று.

---

*(படைப்பா லவிந்தார்) பருஉக்குடர் மாந்திக்
குடைப்புறந் துஞ்சு மிகல - ஞிடைப்பொலிந்த
திங்களிற் றோன்றுங் குறுமுயல்போற் செம்பியன்
செங்கண் சிவந்த களத்து.

என்று புறத்திரட்டிற் காணப்படும் செய்யுளும் இந் நூலதே என்று தோற்றுகிறது. இதில் முதலடியின் முதலிருசீர் பல பிரதிகளில் இல்லை. ஒரு பிரதியில் நகவிளைவினுள் பென்ஸிலால் எழுதப் பெற்றுள்ளது.

# களவழி நாற்பது

## பிரதி பேதம்

முதலது செய்யுளின் எண்; பின்னது அடியின் எண்.

1: 3. முன்பகலெல் ... பின் பகல்
3: 2. ஊன்றி யெழுவர்
4: 2. பரிதி
,, 4. புல்லுரை
6: 2. அடுக்குபு வேற்றிக்
,, 4. மலைத்தாறெறிந்தற்றை
,, 5. மார் பியற்றிண்டேர்ச் செம்பியன்றெவ்
7: 2. இங்குலிக்குன்றே போற்றோன்றுஞ்
8: 2. மெய்ம்மறைப்ப
,, 3. போன்றனவே
9: 2-3 காவார் சோடு ..இருங் கடல் - ஊணில் சுற பிறழ்வ
10: 1. செல்கல்லா
11: 1. மைந்திகந்தார்
13 2. கைந்நற
,, 3. உருமெறியபாம்பிற்
,, 4. சேஎய்பொருது
14: 1. யானைதன் கைந்துணிக் கப்பட்டுப்
,, 2. றிகழொளிய
16: 1. மாகடலித்
17: 3. கழிவிளக்கைப்
,, 5. ஆர்த்தமாவட்டகளத்து
18: 2. பிணக்குருதி
,, 3. தடற்றிடங் கொள்வாட்டலையவிழுந்தார்ச் சேய்
19: 1. எஃகங்கான் மூழ்கிக்
,, 2. தோற்றி
20: 1. ஈர்க்குப் பரப்பி
20: 2. தோற்றம் - திரிவிலா
21: 1. எழின் மருமத்திங்கப்,
1. எழின் மாருணங்கப்
,, 3. வலியாற்றித் துளங் கின வாய்
,, 3. வலியிற் றீரத் துளங்கி னவா மெல்ல
,, 4. கவர்வுமலை
,, 4. கவருமலை
22: 4. கோடுங்கோள்
23: 1. எத்தி வயவர்
,, 3. போன்றவே
24: 2. பாரிற்புரள்பவை
25: 2. பொங்குப
27: 2. குருதிகொடாக்கீண்டி
,, 3. விபன்றபிடா
28: 2. பீடுடைவாளார் பிறங் கிய
,, 3. தடக்கைகள் கொண் டோடி
29: 3. இழந்தோர்
30: 3. மடங்கன் மற
31: 1. பிளந்து
,, 2. களிற்றுக்கும்பத்து
33: 2. செவ்வென்றுள்
,, 4. கொய்சுவலைமாவித்
34: 1. இணரிய ஞாட்பு
,, 3. குடர்கொண்டு
,, 4. அடரைம்பூட்
35: 3. இழிதரு உங்காவிரி
,, 5. அரசுமா
39. 2. போக்கி
41: 1. வேனிறத்தீர்க்க
,, 2. கானிலங்கொள்ளக்

## களவழி நாற்பது

## செய்யுண் முதற்குறிப் பகராதி

[எண், பக்கவெண்]


| | | | |
|---|---|---|---|
| அஞ்சனக் | ௮ | செவ்வரைச் | ௩௧ |
| அரசர் | ௩௩ | ஞாட்பினு | ௩ |
| ஆர்ப்பெழுந்த | ௧௭ | திண்டோண் | ௨௩ |
| இடரிய | ௩௰ | தெரிகணை | ௯ |
| இடைமருப்பின் | ௧௯ | நளிந்த | ௧௮ |
| இணைவே | ௨௰ | நாண்ஞாயிறு | ௧ |
| இருசிறக | ௨௰ | நாற்றிசை | ௭ |
| இருநிலஞ் | ௨௧ | நிரைகதிர் | ௧௪ |
| உருவக்கடுந்தேர் | ௫ | பருமப்பணை | ௩௫ |
| எவ்வாயு | ௨௫ | பருமவினை | ௧௯ |
| எற்றிவயவ | ௨௨ | பல்கணை | ௧௧ |
| ஒழுக்குங் | ௪ | பொய்கை | ௨௯ |
| ஓஒ உவம | ௩௨ | மடங்க | ௨௰ |
| ஓடாமறவரு | ௨௬ | மலைகலங்க | ௨௪ |
| ஓடாமறவரெறி | ௨௮ | மேலோரை | ௧௰ |
| ஓவாக்கணை | ௧௩ | மைந்து | ௩௬ |
| கடிகாவிற் | ௨௭ | மையின் | ௨௮ |
| கவளங்கொள் | ௧௫ | யானைமேல் | ௯ |
| கழுமிய | ௧௨ | வெள்ளி | ௩௯ |
| கொல்யானை | ௧௬ | வேனிற் | ௩௭ |
| செஞ்சேற்றுட் | ௨௫ | ஆகச் செய்யுள் | ௪௧ |

## புத்தக விளம்பரம்.

---

(இ. வை. அனந்தராமையர் பதிப்பு.)

(பெதர்வெய்ட்பேபர்)

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| கலித்தொகை உரையுடன் | | | |
| 1-ஆம் சம்புடம் (பாலை, குறிஞ்சி) | ... | 5 | 0 |
| 2-ஆம் சம்புடம் (மருதம், முல்லை) | ... | 5 | 0 |
| 3-ஆம் சம்புடம் (நெய்தற்கலி, அரும்பத அகராதி.) | ... | 6 | 4 |
| (கிளேஸ் பேபர்.) | | | |
| கலித்தொகை மூலம் | | 1 | 4 |
| களவழி நாற்பது (பழைய உரையோடும் புதிதாக எழுதிய குறிப்போடும் ஒப்புமைப் பகுதியோடும் பிரயோக விளக்கத்தோடும் அரிய முகவுரையோடும் கூடியது.) | ... | 0 | 8 |
| ஐந்திணை யெழுபது (66 செய்யுளும் 24 செய்யுட்குப் பழைய வுரையும் குறிப்புக்களும்)ம் கைந்நிலையும் | | 0 | 6 |

இவை கிடைக்கும் இடம்:—

☞ இ. வை. அனந்தராமையர்,

தமிழ்ப் பண்டிதர்

3/6 பஸார் லேன்,

மயிலாப்பூர், சென்னை.

---